# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய மாத இதழ்

மலர் - 15 மார்ச் 2002 இதழ் - 3



வெளியிடுவோர்

**கிறிஸ்துவின் சபை**

தாராபுரம் ரோடு, காங்கயம் – 638 701.

தமிழ்நாடு, இந்தியா

© 04257-30030, 30382. E-mail: kangayamcofc@eth.net

## அருமையான வாய்ப்பு

பரிசுத்த ஆவியானவரின் பணி (170 பக்கங்கள்) மற்றும் புதிய ஏற்பாட்டு ஆராதனை (112 பக்கங்கள்) ஆகிய நூல்கள், தரம் நிறைந்த தாளில் அழகாக அச்சிடப்பட்டு, மிக நேர்த்தியான முறையில் பைண்டிங் செய்யப்பட்டு, உங்களுடைய உபயோகத்திற்கு ஆயத்தமாக உள்ளது.

பிரசங்கிகளுக்கும், வேத ஆசிரியர்களுக்கும், வேத மாணவர்-களுக்கும், சபை அங்கத்தினர்களுக்கும் மிகவும் பயனுள்ள ஒன்று.

புத்தகம் முற்றிலும் இலவசம். ஆனால், தபால் செலவு உங்களைச் சார்ந்தது. அனுப்பப்படும் தொகை அளவுக்கு புத்தகங்கள் அனுப்பப்படும். அனுப்ப வேண்டிய குறைந்த பட்ச தொகை ரூ.20/-.

**தொடர்பு முகவரி**

**தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்**
தபால் பெட்டி எண் 27,
காங்கயம் - 638 701. இந்தியா.

குறிப்பு: M.O. கூப்பனில் உங்கள் முகவரியைத் தெளிவாக எழுதவும்.

## ஆசானின் அறிவுரையிலே...

1. ஆசிரியர் உரை 1
2. ஏலகிரிக்கு வாருங்கள் 11
3. கிறிஸ்தவர்களல்லாத சிலர் 12
4. பெண்கள் பகுதி 14
5. வாலிபர் பகுதி 17
6. எரேமியா ஒரு கண்ணோட்டம் 20
7. சிறுவர் பகுதி 21
8. வெளிப்படுத்தின விசேஷம் 23
9. உலகில் கிறிஸ்துவுக்கென்று சுவிசேஷ ஊழியம் 29

# THIRUMARAI AASAAN

*PUBLISHED BY CHURCH OF CHRIST*

Editor
S. Rajanayagam

Honorary Editor
J.C. Choate

Dharapuram Road, Kangayam - 638 701, Tamil Nadu, India

*Pleading for the restoration of pure New Testament Christianity*

Vol.15 March - 2002 Issue-3


**ஆசிரியர் உரை**

# "தானியேல் தப்புவிக்கப்பட்டான்"

இப்பொழுதெல்லாம் செய்தித்தாள்களைத் திறந்து வாசிக்கும் போது, நமக்குக் கிடைக்கின்ற பல செய்திகளினூடே, "**தப்பினான் அல்லது தப்பினார்**" என்ற வார்த்தைகளை ஒட்டிய செய்திகளும் இடம்பெற்றிருக்கும். சிறைச்சாலையில் இருந்து ஆயுள் கைதி தப்பினான் என்றோ அல்லது போலீஸ் காவலில் இருந்து விசாரணைக் கைதி தப்பினான் என்றோ அவை இருக்கும். சில வேளைகளில், ஒரு பெரிய ஆபத்திலிருந்து அல்லது நேர இருந்த கொடிய விபத்திலிருந்து ஒருவரோ அல்லது பலரோ தப்பினர் என்றும் இருக்கும். இன்னும் சில சந்தர்ப்பங்களில், ஒருவரோ அல்லது ஒரு கூட்டமோ "**தப்புவிக்கப்பட்டார்கள்**" என்று இருக்கும். இப்படிப்பட்ட செய்திகளை நாம் கவனித்துப்படித்தால், இதில் மறைந்துள்ள ஓர் உண்மையை எளிதாகப் புரிந்து கொள்ளலாம். அதாவது, ஒருவனோ அல்லது ஒரு கூட்டமோ தப்பினர் என்பதற்கும், தப்புவிக்கப்பட்டனர் என்பதற்கும், அதன் தன்மையில் மிகுந்த வேறுபாடு உண்டு என்பதே அவ்வுண்மை. ஆம், தப்பினான் அல்லது தப்பினார் என்பது, ஒருவனுடைய முயற்சியாலோ, சாமர்த்தியத்தாலோ, அல்லது சமயோசிதத்தாலோ நடைபெறுகின்ற ஒன்று. ஆனால், தப்புவிக்கப்பட்டான் அல்லது தப்புவிக்கப்பட்டார்கள் என்பது அப்படிப்பட்டதல்ல. அது பிறரின் உதவியாலும், தயவாலும், கருணையாலும், இரக்கத்தினாலும், நடக்கின்ற ஒன்று. இவ்வுண்மையைத் தெரிந்து கொண்டவர்களாக நாம் மேற்கொண்டு தொடருவோம்.

இங்கே, தானியேல் பற்றி நாம் பார்க்க இருப்பதால், அவன் பற்றிய காரியங்களைக் கொஞ்சம் தெரிந்து கொள்வோம்.

பரிசுத்த வேதாகமத்தின் பக்கங்களால் உயர்த்திப் பிடிக்கப்பட்ட தேவதாசர்கள் பலர் உள்ளனர். ஆனாலும் கூட, அவர்களின் வாழ்க்கைச் சரித்திரத்தை நாம் உற்று நோக்கினால், அவர்களில் பலர், சில சந்தர்ப்பங்களிலாவது தவறிழைத்திருக்கிறார்கள் என்பதை நாம் கண்டறிய முடியும். வாழ்ந்த வாழ்க்கை முழுவதும் குறிப்பிடத்தக்க தவறுகளுக்கு இடம் தராதவர்கள் என்று, ஒரு சிலரைத் தான் நாம் இனம்கான முடியும். அவர்களில் ஒருவனாக இருக்கக்கூடிய சகல தகுதியும் தானியேலுக்கு உண்டு. இவன் பற்றிய எதிரான கருத்து எதையும் வேதாகமம் தெரிவிக்கவில்லை. இவன் காலத்தில் வாழ்ந்த இன்னொரு பெரிய தீர்க்கதரிசியாகிய எசேக்கியேல், தன்னுடைய நூலில் நீதிமான்களுக்கான ஒரு சிறிய பட்டியலைத் தர முனைந்தபோது, இந்தத் தானியேலை அவன் மறக்கவில்லை. அதுவும், இந்தத் தானியேலை யாரோடு ஒப்பிட்டிருக்கிறான் என்று பாருங்கள்.

"அப்பொழுது **நோவா, தானியேல், யோபு** ஆகிய இம்மூன்று புருஷரும் அதின் நடுவில் இருந்தாலும், அவர்கள் தங்கள் நீதியினால் தங்கள் ஆத்துமாக்களை மாத்திரம் தப்புவிப்பார்கள் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்" (எசே14:14) என்று. ஜலப்பிரளயத்தின் நாட்களைச் சேர்ந்த நோவா, அத்தோடு, முற்பிதாக்களின் காலத்தைச் சேர்ந்தவன் என்று நம்பப்படுகின்ற யோபு. இந்த இருவரோடும் தானியேலுக்கும் இடம். நேவாவுக்கும், தானியேலுக்கும் இடையே எத்தனையெத்தனையோ தேவதாசர்கள் இடம் பெற்றிருந்தாலும், அவர்களோடு ஒப்பிடுவதற்கும் மேலான தகுதி இந்த தானியேலுக்கு உண்டு என்று பரிசுத்த ஆவியானவர் எசேக்கியேலுக்கு வெளிப்படுத்திருக்கிறார். அதுமாத்திரமல்ல, தானியேல் தேவனாலே மிகவும் நேசிக்கப்பட்டவனாக இருந்துள்ளான். (தானியேல்.9;23,10;11,19).

கி.மு.606-ல், நேபுகாத்நேச்சர் தெற்கு ராஜ்யத்தையும், அதன் தலைநகரமாகிய எருசலேமையும் சிறுமைப்படுத்தி, அங்கிருந்து அநேகரை அடிமைகளாக அழைத்துச் சென்றான். அப்படிக்கொண்டு செல்லப்பட்டவர்களில் ராஜகுலத்தாரும், பிரபுக்கள் வம்சத்தைச் சேர்ந்தவர்களும் அடங்குவர். இவர்களில் ஒருவனாகத்தான், ஒரு பதினாறே வயது நிரம்பிய நிலையிலிருந்தே தானியேலும் கொண்டு போகப்பட்டான். பாபிலோனியர்களால், இவன் சிறைப்பட்டுப் போயிருந்தாலும், அவன் அந்த சாம்ராஜ்யம் வீழ்ந்து, மேதியா, பெர்சியா சாம்ராஜ்யத்தின் ஆளுகை ஏற்பட்ட நிலையிலும் அங்கேயே இருந்துள்ளான். (536 கி.மு.) அதாவது, தன்னுடைய வாழ்நாளில், இரண்டு சாம்ராஜ்யங்களைக் கண்டு, அவ்விரண்டிலும் மிக உயர்ந்த பொறுப்பிலிருந்துள்ளான். நேபுகாத்நேச்சார், தானியேலை, பாபிலோன் மகாணம் முழுவதுக்கும் அதிபதியாகவும், பாபிலோனிலுள்ள சகல ஞானிகளின் மேலும், பிரதான அதிகாரியாகவும் வைத்திருந்தான். (தானி. 2:48).

அந்த நாட்களில் பாபிலோனின் அதிபதி என்பது சாதாரணமான பதவி அல்ல. அன்றைய உலகின் தன்னிகரற்ற பட்டணம் தான் பாபிலோன். சதுரவடிவிலான இப்பட்டணத்தின் ஒவ்வொருபுறமும் 24 கி.மீ.தொலைவு கொண்டது.பட்டணத்தின் மதில்கள் 300 அடி உயரமும் 80 அடி அகலமுடையதாயிருந்தது. அந்த மதில்களில் 250 காவற்கோபுரங்கள் அமைக்கப்பட்டிருந்தது. பட்டணத்துக்குள் பிரவேசிப்பதற்கு , பித்தளையால் வெகு நேர்த்தியாக வடிவமைக்கப்பட்ட 100 வாயில் கதவுகள் இருந்தன. அந்த பட்டணத்தின் அரண்மனைத் தோட்டம் உலக அதிசயங்களுள் ஒன்று. அது போததென்று, தன்னுடைய மேதிய மனைவியைப் பிரியப்படுத்துவதற்காக நேபுகாத்நேச்சர் 400 அடி உயரம் கொண்ட செயற்கை மலையையும், அதன் மீது மரங்களையும், செடிகளையும் அவைகளுக்கு நீர் பாய்ச்ச ஓடைகளையும் உண்டாக்கி, அவைகளுக்குள் ஆடம்பரக் குடில்களை அழகுறக் கட்டி வைத்தது அப்பட்டணத்திற்கு மேலும் மெருகூட்டியது. இவைகளனைத்தும் பட்டணத்துக்குப் புதிதாக வருபவர்களை மாத்திரமல்ல, தினம் தினம் பார்க்கும் பட்டணத்து வாசிகளையே பிரமிக்க வைத்தது. ஆகவேதான், அது மகா பாபிலோன் என்றழைக்கப்பட்டது.

இந்த மகா பாபிலோனின் அதிபதியாக இருந்த தானியேல், அதன் அஸ்தமனத்திற்குப் பிறகு, ஆளும் பொறுப்பை ஏற்றுக்கொண்ட மேதியனாகிய தரியுவின் நாட்களிலும் முன்போலவே உயர்த்தப்பட்டான். ஆம், பரந்து விரிந்து கிடந்த தனது ராஜ்யத்தை நிர்வகிப்பதற்கு 120 தேசாதிபதிகளையும், அவர்களைக் கண்பாணிப்பதற்கு 3 பிரதானிகளையும் ஏற்படுத்தினான். இந்த மூவரில் ஒருவனாக தானியேல் இருந்தான் என்று குறிப்பிடப்பட்டிருந்தாலும். உண்மையில். ஏனைய இருவருக்கும் மேற்பட்டவானாகவே இவன் இருந்துள்ளான். எப்படியெனில், **"தானியேலுக்குள் விசேஷித்த ஆவி இருந்தமையால், அவனை ராஜ்யம் முழுமைக்கும் அதிகாரியாக வைக்க ராஜா எண்ணிக்கொண்டிருந்தான்** " (6:3) என்று வசனம் கூறுகிறது. இதை அறிந்த மற்ற பிரதானிகளுக்கு, இதைத் தாங்கிக் கொள்ளவோ, பொறுத்துக் கொள்ளவோ முடியவில்லை. ஓர் அடிமைக்கு அடங்கி நடக்க வேண்டிய அவல நிலையை, எப்பாடுபட்டாவது தடுத்து நிறத்தக் கங்கணம் கட்டுகின்றனர். முதல் கட்டமாக ராஜ்யத்தின் விசாரிப்புக்கடுத்த காரியத்தில் குற்றம் கண்டுபிடிக்க முயற்சி. ஆனால், படுதோல்வி. அடுத்து, வேறுஎதுவுமே கிடைக்காதா என்று ஏக்கப்பெருமூச்சு விட்டபோதுதான், பக்திக்குண்டான விஷயத்தில் அவனை அகப்படுத்திவிட முடியுமென்ற நம்பிக்கை துளிர்க்கிறது (6:45). ஆகவே, அதற்கான பகீரதப் பிரயத்தனத்தில் ஈடுபட்டு, சதியாலோசனை செய்கின்றனர்.

சதிக்கும், சூழ்ச்சிக்கும் நிரந்தர வெற்றி ஒருபோதும் கிடைக்காவிட்டாலும், வெற்றி கிடைத்துவிடும் என்ற நம்பிக்கையையும், சில சமயங்களில் கிடைத்துவிட்டதைப் போன்ற மாயத் தோற்றத்தையும் அது அசராமல் காட்டும். ஆகவே, அதில் ஈடுபடுபவர்கள் வெகு உற்சாகத்தோடு செயலில் இறங்குவர். இங்கே, தானியேலை அவன் ஸ்தானத்திலிருந்து தலைகுப்புறத் தள்ளிவிட வேண்டுமென்று கங்கணம் கட்டிய தேசாதிபதிகளும், பிராதானிகளும் கனகச்சிதமாகக் காய் நகர்த்துகின்றனர். ஆம், ராஜாவைத் தவிர வேறெந்தத் தேவனையாகிலும், மனுஷனையானாலும் நோக்கி, யாதொரு காரியத்தைக் குறித்தும் விண்ணப்பம் பண்ணக் கூடாதென்று சதித் திட்டம் தீட்டி, அதை மீறுபவர்கள் சிங்கக் கெபியிலே போடப்பட வேண்டுமென்று பவ்வியமாக ராஜாவுக்கு எடுத்துசொல்லி, அதற்கு மாறாப் பிரமாணத்தின்படி முத்திரையையும் பெற்றுவிடுகின்றனர். (தானி.6:6-9).

இப்பொழுது தாங்கள் வைத்த குறி தப்பவில்லையென்று கொக்கரிக்கும்படியான அனுகூலச் சூழ்நிலை அவர்களுக்கு உண்டாகிவிட்டது. அவர்கள் கணக்குப்படி தானியேல் அதிசீக்கிரத்தில் அவுட். ஆனால், இப்படியொரு சட்டம் இயற்றப்பட்டு அதற்கு ராஜாவின் முத்திரையும் வைத்தாகிவிட்டதென்று தெரிந்தும்கூட, தானியேல் துளியும் அலட்டிக்கொள்ளவில்லை. “**தான் முன் செய்து வந்தபடியே., தினமும் மூன்றுவேளையும், தன் தேவனுக்கு முன்பாக முழங்கால்படியிட்டு ஜெபம் பண்ணி, ஸ்தோத்திரம் செலுத்தினான்**” (6:10). மேலெழுந்த வாரியாகப் பார்க்கும்போது, சூழ்ச்சிக்காரர்களின் சதிவலையில், தானியேல் வலியச் சென்று விழுந்து விட்டதைப் போலத் தோன்றும். ஆனால், அது உண்மையல்ல.

ராஜகட்டளை மீறப்பட்டபடியால், தானியேல் சிங்கங்களின் கெபியிலே போடவேண்டிய நாள்வருகிறது (6:13). தானியேலுடைய எதிரிகளின் சதியாலோசனையை அறியாமல், தன் கையெழுத்தை இட்டுவிட்ட ராஜா அங்கே தவியாய்த் தவிக்கிறான் (6:14). தானியேலைக் காப்பாற்றும் முயற்சியில் தன்னை ஈடுபடுத்துகிறான். ஆனால். சதிகாரர்களின் வஞ்சக வார்த்தைகள் முயற்சிகளை முடமாக்கிப் போட்டது (6;15). வேறுவழியேயில்லாத ராஜா, தானியேலை சிங்கங்களின் கெபியில் போட கட்டளைகொடுத்த கையோடு, “**தானியேலை நோக்கி: நீ இடைவிடாமல் ஆராதிக்கிற உன் தேவன் உன்னைத் தப்புவிப்பார்**” என்றார் (6:16). ஆனால், அதன் பின்பும், அவனால், நிலைகொள்ள முடியவில்லை. “**இராமுழுவதும் போஜனம் பண்ணாமலும், வாத்தியங்கள் முதலானவைகள் தனக்கு முன் வரவொட்டாமலும் இருந்தான். அவனுக்கு நித்திரையும் வரவில்லை**” (6:18).

அந்த இரவை, ஒரு யுகம் போல் கழித்த மகாராஜாவாகிய தரியு, கிழக்கு வெளுக்கும்போது, சிங்கங்களின் கெபிக்கு தீவிரித்து வந்து. துயர சத்தமாக "தானியேலே, ஜீவனுள்ள தேவனுடைய தாசனே, நீ இடைவிடாமல் ஆராதிக்கிற உன் தேவன் உன்னைச் சிங்கங்களுக்குத் தப்புவிக்க வல்லவராயிருந்தாரா? என்று கேட்டான். அதற்குத் தானியேல், சிங்கங்கள் என்னைச் சேதப்படுத்தாதபடிக்கு தேவன் தம்முடைய தூதனை அனுப்பி, அவைகளின் வாயைக் கட்டிப்போட்டார்; அதேனென்றால், அவருக்கு முன்பாக நான் குற்றமற்றவனாய்க் காணப்பட்டேன்; ராஜாவாகிய உமக்கு முன்பாகவும் நான் நீதிக்கேடு செய்ததில்லை என்றான் (6:22).

சரி, இங்கே தானியேல், சர்வவல்லவரால், அவருடைய தூதனால் சிங்கங்களின் கெபியிலிருந்து **தப்புவிக்கப்பட்டான்**. காலம் காலமாக சிங்கங்களின் கெபியில் போடப்பட்ட யாருமே தப்பியாமலிருக்கும்போது, தானியேல் மாத்திரம் **தப்புவிக்கப்பட்டுள்ளான்.**

தானியேல் மீது குற்றஞ்சாட்டியவர்களை கெபியண்டையில் கொண்டு போன போதே, சிங்கங்கள் பாய்ந்து அவர்கள் எலும்புகளையெல்லாம் நொறுக்கியிருக்கிறது. அப்படியானால், தானியேல் தேவனால் **தப்புவிக்கப்படுகின்ற அளவுக்கு, எப்படிப்பட்ட பண்புகளை உடையவனாயிருந்தான்** என்பதை நாம் தெரிந்து கொள்வது, நமது ஆன்மீக வாழ்வுக்குப் பயனுற்றதாயிருக்குமாகையால், அவைகளில் சிலவற்றை இப்பொழுது தெரிந்து கொள்வோம்.

**I. தானியேல் கொள்கையும், தீர்மானமுமுடையவனாயிருந்தான் (1:8).**

தானியேல், தப்புவிக்கப்பட்டதற்கான, முதல் காரணமாக நாம் தெரிந்து கொள்ள வேண்டியது அவனது கொள்கை உறுதி மற்றும் தீர்மானம் பற்றியது.

தானியேல் 1;8 ஐக் கவனியுங்கள். "தானியேல் ராஜாவின் போஜனத்தினாலும், அவர் பானம் பண்ணும் திராட்ச ரசத்தினாலும் தன்னைத் தீட்டுப்படுத்தலாகாதென்று தன் இருதயத்தில் தீர்மானம் பண்ணிக்கொண்டு,, தன்னைத் தீட்டுப்படுத்தாதபடி பிரதானிகளின் தலைவனிடத்தில் வேண்டிக்கொண்டான்". அடிமையாகச் சென்ற இடத்தில், அன்றாடங் காய்ச்சியாக வாழவேண்டிய நிலையிருந்தவனுக்கு, அனுதினமும் ராஜபோஜனம் உண்ணும் அதிர்ஷ்டம் வலிய வந்து சேருகிறது. நாமாக இருந்தால் என்ன செய்திருப்போம்? அறுசுவை உணவு வகைகளை, மூக்குப்பிடிக்க மூன்றுவேளையும் உண்டு, முடங்கிக் கிடந்து, நாட்களை நிம்மதியாகக் கழித்திருப்போம். ஆனால், இந்தத் தானியேல் நன்றாகச் சாப்பிடக் கூடிய வயதில் இருந்தாலும், கொடுக்கப்படும் ஆகாரத்தின்

வகைகளையும், அதன் ருசியையும் மாத்திரம் பார்க்காமல், அந்த ஆகாரத்தினால் ஏற்படும் விளைவுகளையும் கணக்கிட்டான். அவன் கணக்கு, அந்த ராஜபோஜனம் தன்னைக் கட்டாயம் தீட்டுப்படுத்திவிடும் என்று எண்ணவைத்தது. அதன் விளைவு, "ராஜபோஜனம், வேண்டவே வேண்டாம் "என்ற தீர்மானம். இந்தத் தீர்மானம், எவ்வளவு பெரியது என்பதை நீங்கள் உட்கார்ந்து ஆற அமர யோசித்தால் நன்றாகவே புரியும்.

ஆகாரம் எப்படி அவனைத் தீட்டுப்டுத்தியிருக்கக்கூடும்? இதற்கு ஓரிரண்டு காரணங்களை நாம் கூறமுடியும். முதலாவது வெளியே இருந்து உள்ளே போவது மனுஷனைத் தீட்டுப்படுத்தாது என்று புதிய ஏற்பாடு இப்போது நமக்கு கூறினாலும், (மத்.15;11), அந்த நாட்களின் நிலை அதுவல்ல. மோசேயின் பிரமாணத்தின் கீழாக, பறவைகள், மிருகங்கள் போன்றவற்றில், சுத்தமானவைகள் இவையென்றும், அசுத்தமானவைகள் இவையென்றும் பிரிக்கப்பட்டிருந்தது (லேவி.11 ம் அதி) பக்தியுள்ள ஒரு யூதன் அசுத்தமானதைத் தொடவே மாட்டான். கண்டிப்பாக, விக்கிரக வணக்கத்தில் மூழ்கியிருந்த அந்த ராஜாவின் போஜனத்தில் மோசேயின் பிரமாணத்தின்படி தீட்டுள்ள மாமிச போஜனமும். மதுவும் இல்லாமலிருந்திருக்காது. ஆகவே, தேவனுக்கடுத்த காரியத்தில் தங்களைத் தீட்டுப்படுத்தும் போஜனத்தை அடியோடு வெறுத்து ஒதுக்கினான். புதிய ஏற்பாட்டின் ஆரம்ப நாட்களிலும் இந்தப் பழைய பிரமாணத்தின் தாக்கம் வசனத்தையும் மீறி வழக்கத்திலிருந்தது. ஆம், யோப்பா பட்டணத்தில் ஜெபம் பண்ணிக் கொண்டிருந்த பேதுருவுக்குக் கிடைத்த தரிசனத்தின் போது பேதுரு "ஆண்டவரே, அப்படியல்ல, தீட்டும் அசுத்தமுமாயிருக்கிற யாதொன்றும் ஒருக்காலும் என் வாய்க்குள்ளே போனதில்லை "என்றான் (அப்.11;8). ஆகவே இக்காரியத்தில் தானியேலின் தீர்மானம் முற்றிலும் நியாயமானதே. இரண்டாவதாக, தானியேலின் நாட்களில். பாபிலோனில் விக்கிரக வணக்கம் உச்சத்திலிருந்ததால். ராஜபோஜனங்கள் விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்ட பிறகே பரிமாறப்படுமாம். அந்தச் செய்தி இந்த இளைஞனுக்கு எப்படித் தெரிந்ததோ தெரியாது. ஆனால், அப்படிப்பட்ட போஜனத்தை புசித்து, அந்த விக்கிரகங்களை ஒரு பொருட்டென்று அங்கீகரிக்க கூடாது என்ற முடிவுக்கும் வந்தான். தேவனுடைய காரியத்தில் எவ்வளவு தெளிவும், கொள்கையில் எவ்வளவு உறுதியுமுள்ள மனிதனாக, தனது இளம்பிராயத்திலேயே இருந்துள்ளான் என்று பாருங்கள். அதுவும் அடிமையாகச் சென்ற இடத்தில்!

இளம் பிராயத்திலே மாத்திரமல்ல, அவன் வாழ்ந்த காலம் முழுவதும் கொள்கையில் தெளிவும், தீர்மானமுமுடையவனாகவே இருந்துள்ளான். ஆம், அவனுடைய அந்திய காலத்தில், ராஜாவாகிய பெல்ஷாத்கார், தனக்கு வெளிப்பட்ட எழுத்தின், பொருளை எடுத்துச் சொன்னால், "**இரத்தாம்பரமும்,**

**கழுத்திலே பொற்சரப்பணியும் தரிப்பிக்கப்படும்**" என்றான். அதற்குத் தானியேல் பதிலாக, "**உம்முடைய வெகுமானங்கள் உம்மிடத்திலேயே இருக்கட்டும்**" என்றான் (தானி.5;16,17).

மெய்யான தேவனைப் பின்பற்ற விரும்புகிற ஒவ்வொருவரும், நமது தானியேலைப் போல், கொள்கையில், உபதேச காரியங்களில் உறுதியும், பிடிப்புமுள்ளவர்களாகவே இருக்க வேண்டும். முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள், "**அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்டுதலிலும், ஜெபம் பண்ணுவதிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள் என்று காண்கிறோம்**".(அப்.2;42).

இன்றைய கிறிஸ்தவ சமுதாயம், மெய்யான தேவனைக் கண்டுபிடிக்கிற காரியத்தில், வெற்றி கண்டிருக்கிறது. ஆனால், அந்த தேவனால் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்ற மெய்யான உபதேசத்தையும் , அந்த உபதேசம் எடுத்துச் சொல்கின்ற **ஒன்றான மெய்ச் சபையையும்**, அந்த சபைக்குள் வருவதற்கான **வசனத்தின்படியான வழிமுறைகளையும்**, அந்த சபையில் நிலைத்திருப்பதற்குத் தேவையான **மெய்யான வசனப் போதனைகளையும்** அறிந்து கொள்ளாமலிருக்கிறது. இதற்குக் காரணம் தேவனுடைய காரியத்தில் **தெளிவும், உறுதியுமற்ற** தன்மையே. இந்நிலையிலிருந்து நாம்உடனடியாக விடுதலை பெறவேண்டும்.

அன்பானவர்களே, உபதேச காரியங்களில் உறுதிகாட்டின தானியேலை தேவன் சும்மா விட்டுவிடவில்லை, அவனைத் தப்புவித்தார் அவனை உயர்த்தினார். அதைப்போல, நாமும் வசனங்களின் உபதேசக் காரியங்களில், எதைப்பற்றியும், யாரைப்பற்றியும் கவலைப்படாமல் நம்மைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்கப் போகின்ற வசனங்களுக்கு (யோவா.12;48) மாத்திரம் ஒப்புக் கொடுத்து வாழ்வோமானால், இந்த உலகத்தின் பாடுகளிலிருந்தும், பிசாசின் சோதனைகளிலிருந்தும் நாம் தப்புவிக்கப்படுவோம். தேவனுடைய உபதேசங்களுக்கு அடங்கி நடந்தால், அவராலே உயர்த்தப்படுவோம். இம்மையில் மாத்திரமல்ல, மறுமையிலும் அந்த ஆசீர்வாதம் தொடரும். ஆகையால், தானியேலைப்போல தேவனுக்கடுத்த காரியத்தில் தெளிவும், உண்மையுமுள்ளவர்களாயிருந்து உறுதிகாட்டுவோமாக!

## II. தானியேல் குற்றமற்றவனாயிருந்தான் (6:4; 6:22)

தானியேல் தப்புவிக்கப்பட்டதற்கான அடுத்த காரணமாக, நாம் தெரிந்து கொள்ள வேண்டியது, அவனது குற்றமற்றதன்மை.

உங்களுக்கெல்லாம் எப்படியோ, ஆனால், எனக்கு மிகுந்த திகைப்பைக் கொடுக்கக் கூடியது ஆறாம் அதிகாரம் 4-ம் வசனம். தயவு செய்து அவ்வசனத்தைக் கவனியுங்கள். "அப்பொழுது பிரதானிகளும், தேசாதிபதிகளும், ராஜ்யத்தின் விசாரிப்பிலே தானியேலைக் குற்றப்படுத்தும்படி முகாந்தரம் தேடினார்கள். ஆனாலும்., ஒரு முகாந்தரத்தையும் குற்றத்தையும் கண்டுபிடிக்க அவர்களால் கூடாதிருந்தது; அவன் உண்மையுள்ளவனாயிருந்தபடியால் அவன் மேல் சுமத்த யாதொரு குற்றமும் குறைவும் காணப்படவில்லை."

இவ்வசனத்தைப் படிக்கும் போதெல்லாம் எனக்குத் திகைப்புத்தான் வரும். எப்படியெனில், இவனிடத்தில் குற்றம் பிடிக்க விரும்பியவர்கள், ஏதோ எட்டாத தூரத்திலிருந்தவர்கள் அல்ல, இவனோடும், இவன் கீழும் பணியாற்றிய சக அதிகாரிகள். கிட்டத்தட்ட 24 மணிநேரமும் இவன் செயலைக் கண்காணிக்கும் வாய்ப்புப் பெற்றவர்கள். அந்த 120 தேசாதிபதிகளும், 2 பிரதானிகளும் கண்ணில் விளக்கெண்ணெய் விட்டு, விழிநோகத் தேடியும் ஒரு முகாந்திரமும் கிட்டவில்லையாம், தானியேலிடம் ஒரு குற்றமும் கண்டுபிடிக்க முடியவில்லையென்பது உங்களுக்கெல்லாம் ஆச்சரியமாக இல்லையா?

இதை வாசிக்கும் அநேகராகிய நாம், நம்முடைய வாழ்க்கையிலும் சில சிறிய பொறுப்புகளிலிருந்து, பெரிய பொறுப்புகள் வரை வகித்தவர்களாகவோ அல்லது வகிப்பவர்களாகவோ இருப்போம். குறைந்தபட்சம் குடும்பப் பொறுப்பாவது நம்மிடம் இருக்கும். கடைசிக்கு, நம்முடைய குடும்பத்திலுள்ளவர்களாவது நம்மைக் குற்றமற்றவர்களென்று சொல்ல முடியுமா? சொல்லுங்கள் பார்க்கலாம். ஒருவேளை, வெளியே தெரிந்தால் வெட்கம் என்பதற்காக பூசி மொழுகலாமே தவிர, உண்மைநிலை கண்டிப்பாக அதுவாக இருக்காது, அப்படித்தானே.

தானியேல் பற்றி, இவ்வசனத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கும் ஆங்கில வார்த்தைகளுக்கான பொருள், தமிழ்வேதாகமத்தில் பயன் படுத்தப்பட்டிருக்கும் வார்த்தையின் பொருளைக் காட்டிலும் மேலானதாக உள்ளது. ஆம், வாய்மை தவறாதவனென்றும், சுத்தவானென்றும், முழுமையும் முதிர்ச்சியுமுடையவன் என்றுமுள்ளது. இப்பொழுது, தானியேல், ஏன் தப்புவிக்கப்பட்டான் என்பது நமக்கு நன்றாகவே விளங்கும் என நம்புகிறேன்.

பரலோகத்தின் தேவனால், நாமும் தப்புவிக்கப்படவேண்டுமானால், அதாவது இந்த உலகத்தின் காரியங்களிலிருந்தும், இனிவரும் உலகத்தின்

அழிவிலிருந்தும் தப்புவிக்கப்பட வேண்டுமானால், நாமும் நம்முடைய அன்றாட ஆன்மீக வாழ்வில் குற்றமும், குறைவும் அற்றவர்களாக இருக்க வேண்டும். தேவனுடைய வார்த்தைகள் நாம் அப்படி இருக்க வேண்டுமென்றே சொல்கிறது. **கோணலும் மாறுபாடுமான சந்ததியில் குற்றமற்றவர்களாக இருக்கவேண்டுமென்றும்** (பிலி.2:15) நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வரும்போது குற்றமற்றவர்களாக இருக்க வேண்டுமென்றும் வசனம் சொல்கிறது. (1.தெச.5:23, 2.பேதுரு.3:14).

அருமையானவர்களே! குற்றமற்றவர்களாயிருக்க வேண்டுமென்பதன் பொருள் பரிசுத்தமுள்ளவர்களாயிருக்க வேண்டுமென்பது, ஆன்மீக வாழ்வுக்கும், மெய்க் கிறிஸ்தவ வாழ்வுக்கும் மிக,மிக அத்தியாவசியமானது பரிசுத்தம். ஏனெனில், பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரை தரிசிக்க முடியாது. (எபி.12:14) அப்போஸ்தவர்களாகிய பவுல், ரோமாபுரியாருக்கு எழுதும்போது, உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமாக வைத்துக் கொள்ளுங்கள் என்கிறான்(ரோம.6;19,12;1). அப்போஸ்தலன் பேதுரு, "உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறது போல், நீங்களும் உங்கள் நடவடிக்கை களெல்லாவற்றிலும் பரிசுத்தராயிருங்கள்' என்று கூறுகிறான். (1.பேது.1:15). கிறிஸ்துவின் சபையானது, அதாவது சபையின் அங்கத்தினர்கள் ஒவோருவரும் கறைதிரை ஒன்றுமில்லாமல், பரிசத்தமும், பிழையற்றவர்களாயுமிருக்க வேண்டுமென்பது வசனத்தின் போதனை. தேவனுடைய எதிர்பார்ப்பு.

ஆகையால், நாம் குற்றமற்றவர்களாய் வாழ்ந்து, பரிசுத்தம் காத்து, இம்மையையும், மறுமையையும் சுதந்தரித்துக் கொள்வோமாக!

## III. தானியேல் ஜெப வீரனாக இருந்தான் (6:10)

தானியேல் தப்புவிக்கப்பட்டதற்கான மூன்றாவது காரணமாக நாம் தெரிந்து கொள்ளவேண்டியது, அவன் ஒரு ஜெபவீரனாய் இருந்தான் என்பது.

இப்பொழுதெல்லாம் கிறிஸ்தவ சமுதாயத்திற்கு, ஜெபம் செய்வது அன்றாட வேலைகளில் ஒன்று என்றாகிவிட்டது. ஆம், காரண காரியம் எதுவும் தெரியாமல் நடக்கும் ஒரு காரியமாக மாறிவிட்டிருக்கிறது. **ஏன், எதற்கு எப்படி யார்மூலம்** என்பன பற்றியெல்லாம் கவலைப்படாமலே, அது சகட்டு மேனிக்குச் செய்யப்படுகிறது. **அன்புள்ள இயேசுவே** என்று ஆரம்பித்து **இயேசுவின் மூலம் கேட்கிறோம்** என்ற முடிக்கின்ற வெகுஜன ஆதரவு பெற்ற பிரபல கோட்டுப் பிரசங்கிகளும், அருளாட்சியாளர்கள் என்று அங்கீகாரம் பெற்ற அங்கிக்காரர்களும், ஆவியிலும், மாம்சத்திலும் பாமரர்களாய் உள்ளவர்களை படுசாமர்த்தியமாக வளைத்துப்போட்டுள்ள ஜிப்பாவினரும் இருக்கவே செய்கிறார்கள். அவர்களை எல்லாம் குற்றப்படுத்துவதோ அல்லது ஜெபம் எப்படி இருக்க வேண்டுமென்று இங்கே பேசுவதோ என் நோக்கமல்ல. இருப்பினும், தானியேல் தப்புவிக்கப்பட்டதற்கான காரணங்களுள் ஜெபம் மிக

முக்கிய பங்கை வகித்திருக்கிறதென்று வலியுறுத்தவே விரும்புகிறேன்.

இங்கே தானியேல் எப்பொழுது, எந்தச் சூழ்நிலையில் ஜெபித்துள்ளான் என்று கவனியுங்கள். "தானியேலோவென்றால், அந்தப் பத்திரத்துக்குக் கையெழுத்து வைக்கப்பட்டதென்று அறிந்தபோதிலும், தன் வீட்டுக்குள்ளே போய், தன் மேல் அறையிலே எருசலேமுக்கு நேராகப் பலகணிகள் திறந்திருக்க, அங்கே தான் முன் செய்து வந்தபடியே, தினம் மூன்ற வேளையும் தன் தேவனுக்குமுன்பாக முழங்காற்படியிட்டு ஜெபம் பண்ணி ஸ்தோத்திரம் செலுத்தினான்"(6;10). இங்கே, தானியேலின் ஜெபம், குறைந்தது மூன்று பாடங்களை நமக்கு கற்றுத்தருகிறது. **1.** ஆம், அவன் முழங்காற்படியிட்டு ஜெபித்தது, ஜெபிக்கும்போது ஒருவனுக்கு இருக்க வேண்டிய தாழ்மையான மனநிலைக்கு அடையாளமாக உள்ளது. **2.** அவன் தினம் மூன்று வேளை ஜெபித்தது, தேவனை, நேசிக்கும் ஒருவன், அவரை எந்த அளவு சார்ந்திருக்க வேண்டுமென்பதை வெளிப்படுத்துகிறது. **3.** ஆபத்து தலைக்குமேல் இருந்த நிலையிலும் அவன் ஜெபித்தது, தேவனை ஒருவன் எச்சூழலிலும் மறவாமல், அவருக்கு எப்போதும் நன்றியுடையவனாக இருக்கவேண்டுமென்பதை விளக்குகிறது.

பரிசுத்த வேதாகமத்தில், தேவனுக்குப் பிரியமாய் வாழ்ந்த தாசர்களையெல்லாம் நாம் கண்ணோக்கினால், அவர்களனைவரும் ஜெபவீரர்களாகவே இருந்துள்ளனர். ஜெபத்தில் உறுதிகாட்டாத யாரும் தேவனுக்குப் பிரியமாயிருந்ததேயில்லை. புதிய ஏற்பாடு, ஜெபத்தை வலியுறுத்தியும், ஜெபத்தை மேன்மைப்படுத்தியும் ஏராளமான பகுதிகளைக் கொடுத்துள்ளது. "ஜெபம்" என்ற மூன்றெழுத்து வார்த்தைக்கு இருக்கும் வல்லமை, உலகில் வேறெதற்கும் இல்லை என்று துணிந்து கூற முடியும்.

தானியேல் இடைவிடாமல் ஆராதித்து, ஜெபித்துள்ளான். அப்போஸ்தலன் பவுலும், தெசலோனிக்கேயருக்கு எழுதும்போது, இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்" என்றே நமக்கு எழுதியுள்ளார். (1.தெச.5;17).

தாழ்மையான ஜெபமும், எப்பொழுதும் தேவனையே சார்ந்த ஜெபமும, நன்றியுள்ள ஜெபமும், இடைவிடாத ஜெபமும் தானியேலை சிங்கங்களின் கெபியிலிருந்து காப்பாற்றியதென்பது நமக்கு நினைவிருக்கட்டும். ஆகையால் நாமும் தானியேலைப் போல ஜெபிப்போமானால், நமக்கு எதிர்வரும் பிரச்சினைகள் எதுவாக இருந்தாலும் அதிலிருந்து காப்பாற்றப்படுவோம். இம்மையில் மாத்திரமல்ல, மறுமையிலும் காப்பாற்றப்படுவோம். சந்தேகமே வேண்டாம்.

அருமையானவர்களே, தானியேல் போல் உபதேச காரியங்களில் தீர்மானம் உள்ளவர்களாயும், அன்றாட வாழ்வில் குற்றமற்றவர்களாகவும், தேவனை நோக்கி இடைவிடாமல் ஜெபிப்பவர்களாகவும் நாம் இருப்போமாக! ஆமென்.

**S. ராஜநாயகம்.**

ஜெபியுங்கள்! பங்கு பெறுங்கள்!!

# வேனிற்கால வேதாகம முகாம்

*மற்றும்*

## திருமறை ஆசான் வாசகர் கருத்தரங்கம்

இடம் : YMCA வளாகம், ஏலகிரி மலை (வேலூர் மாவட்டம்)
(ஜோலார்பேட்டை இரயில்வே ஜங்ஷனிலிருந்து, சுமார் 25 கி.மீ.
திருப்பத்தூர் பஸ் நிலையத்திலிருந்து சுமார் 30 கி.மீ.)

**நாள் : மே மாதம் : 1 to 4- 2002**
**புதன் மாலை 5 மணி முதல் சனி காலை 11 மணி வரை**

**சிறப்பம்சங்கள்**

★ கோடையின் கொடுமையிலிருந்தும், வழக்கமான வாழ்க்கை முறையிலிருந்தும் விடுபட்டு, தேவ சமூகத்தில் காத்திருக்க அருமையான சந்தர்ப்பம்.

★ தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வருகை தரும் தேவகாசர்கள்

★ ஆன்மீக வளர்ச்சிக்கு வழிகோலும் தேவச் செய்திகள்

★ கோடை வாசஸ்தலம் – சமச்சீரான தட்பவெப்பம்

★ குடும்பத்துடன் தங்குவதற்கு ஏற்ற சூழ்நிலை

★ பெண்களுக்கு தனி இட வசதி உண்டு.

**உணவும்மை தங்குமிட மும் இலவசம் பதிவுக்கட்டணம்**
**பெரியவர்களுக்கு ரூ 100/-**
**சிறியவர்களுக்கு ரூ.50/-**

தொடர்பு முகவரி : கிறிஸ்துவின் சபை
195, தாராபுரம் ரோடு, காங்கயம் – 638 701.
Ph : 04257 - 30030, 30382.e-mail : Kangayam cofc @ eth.net

குறிப்பு : சுமார் 400 பேர் மாத்திரம் தங்க இட வசதி உண்டு. ஆகவே பணம் M.O. செய்து முன்பதிவு செய்து கொள்ளுங்கள்.
முகாமிற்கு வருகிறவர்கள் தவறாமல் பைபிள், தட்டு, டம்ளர், படுக்கை விரிப்பு கொண்டு வர வேண்டும்.

# கிறிஸ்தவர்களல்லாத சிலர்

அநேகர் தங்களை கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்கின்றனர். ஆனால் அப்படிச் சொல்லிக் கொள்பவர்களெல்லாம் கிறிஸ்தவர்களல்ல. இது உங்களுக்கு அதிர்ச்சியாக இருக்கலாம். ஆனால் எப்படியிருப்பினும் உண்மை இதுதான்.

1. தங்களை கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளும் ஒரு குடும்பத்தில் ஒருவன் பிறப்பதால் மாத்திரம் அது அவனை கிறிஸ்தவனாக்கி விடாது. அப்படியிருந்தால் புத்த, இந்து, முஸ்லீம் போன்ற பலதரப்பட்ட குடும்பத்தில் பிறப்போரேல்லாம், அந்தந்த மதத்திற்குரியவராக்கிவிடும் என்று நான் உணருகிறேன். இது கத்தோலிக்கத்திலும் உண்மையானது. ஆனால் தூய புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தில் இது உண்மையல்ல. கிறிஸ்துவ குடும்பத்தில் ஒருவனின் மாம்ச பிறப்பு அவனை கிறிஸ்தவனாக்காது. ஒருவன் கிறிஸ்துவில் விசுவாசம் வைத்து, அவருக்கு கீழ்படிந்தவராகி, மறுபடியும் பிறந்து தேவனுடைய குடும்பத்தில் பிறக்கும்போது தான் (யோவான் 3:3-5), ஒருவன் தன்னை உண்மைக் கிறிஸ்தவன் என்று சொல்லிக் கொள்ள இயலும்.
2. ஒருவனது பிறப்பில், தெளிக்கப்பட்டால், அது அவனை கிறிஸ்தவனாக்கிவிடாது. முதலாவதாக ஞானஸ்தானம் என்பது தெளித்தல் அல்ல, முழுக்கப்படுதலே (தண்ணீரில் அடக்கம் பண்ணப்படுதலே) யாகும். (சொலோசேயர் 2:12; ரோமர் 6:3,4 அப்போஸ்தலர் 8), இரண்டாவதாக, ஞானஸ்தானம் பண்ணப்படுபவர், சத்தியத்தை நன்கு கேட்டு (ரோமர் 10:17), விசுவாசித்து (ரோமர் 10:10), தனது பாவங்களிலிருந்து மனந்திரும்பி (லூக்கா 13:13), இயேசு கிறிஸ்து தேவருடைய குமாரன் என்று தமது வாயினால் அறிக்கை செய்து (மத். 10:32), ஞானஸ்நானம் பெற்றிருக்க வேண்டும். ஞானஸ்நானம் பெறுகிற ஒருவருக்காக மற்றவர்கள் யாரும் இதைச் செய்ய முடியாது. மூன்றாவதாக, கணக்கு ஒப்புவிக்கும் (நன்மை தீமை அறிகிற) பிராயத்தை அடைகிறவரை, தங்கள் செய்கைகளுக்கு பொறுப்பாளிகள் அல்ல. (மத்தேயு 18: 1-3). எனவே ஒருவனுடைய பிறப்பின்போது தெளிக்கப்படும் ஞானஸ்தானம், அவனது வாழ்வில் அவனைக் கிறிஸ்தவனாக்க போதுமானதல்ல. கிறிஸ்துவுக்கு ஒருவன் (முழுக்கு ஞானஸ்நானத்திலே) கீழ்படுத்தும்போது தான் அவன் கிறிஸ்தவனாகிறான், தெளிக்கப்படுதலோ மனித உபதேசம்.
3. கிறிஸ்துவை ஒருவன் தேவனுடைய குமாரன் என்று விசுவாசிக்கிறதினால் மாத்திரம் அவன் கிறிஸ்தவனாகிவிட முடியாது. கிறிஸ்து தேவனுடையகுமாரன் என்று ஒருவர் கிறிஸ்தவனாக மாற வேண்டுமானால் விசுவாசிப்பது அவசியம்தான். ஆனால் இது மாத்திரம் ஒருவனை கிறிஸ்தவனாக்காது. அப்படியிருக்குமாயின், பிசாசுகளும் விசுவாசித்து நடுங்குவதால், அவைகளும் கிறிஸ்தவன் என்று அழைக்கப்பட வேண்டும். (யாக்கோபு 2: 19). ஆனால் ஒருவன் கிறிஸ்தவனாக வேண்டுமானால், கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று விசுவாசிப்பதோடு, அவருடைய

உபதேசங்களுக்கு தன்னைக் கீழ்படுத்தத் தக்கதாக, விசுவாசிக்க வேண்டும். (எபிரேயர்.5:8:9; 1 பேதுரு 2:21), அவருக்கு உண்மையுள்ளவராகவும் இருக்க வேண்டும். (வெளிப்படுத்தின விசேஷம் 2:10).

4. ஏதோ ஒரு நாமகரணக் கூட்டத்தில் தான் அங்கம் வைத்திருப்பதாலேயே தன்னை ஒரு கிறிஸ்தவனாக அர்த்தமாக்கிக்கொள்ள முடியாது. அநேக பிரிவு சபைகள் உள்ளன. ஆதலால் அதில் அங்கம் வகிப்போரெல்லாம் தங்களை கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்கின்றனர். ஆனால் உண்மையில் அவர்கள் வஞ்சிக்கப்பட்டவர்கள். கிறிஸ்துவை பின்பற்றும் போது, அதன் விளைவு, ஒருவனை ஒரு நாமகரண கூட்டத்தின் அங்கமாக்குவதல்ல. வேதாகமம் கிறிஸ்தவனை மட்டும் உருவாக்குகிறது. (அப்போஸ்தலர் 11;26), வசனம் நம்மை கிறிஸ்துவுக்குள் பிரித்து வைக்காமல், ஒற்றுமைப்படுத்துகிறது. (1 கொரிந்தியர் 1;10) எனவே ஒருவர் மனித சபையில் அங்கமாக இருந்தால், அவர் கிறிஸ்தவரல்ல. அவர் அநேக சாக்கு போக்குகளைச் சொல்லலாம். ஏராளமாக தர்க்கம் செய்யலாம். இருப்பினும், வேதம் போதிக்கிற கிறிஸ்தவராக அவர் இருக்க இயலாது. அவர் கிறிஸ்தவராக இருப்பின் அவர் ஒரு நாமகரண கட்டத்தைச் சார்ந்தவராக இல்லாமல் கர்த்தருடைய சபையில் அங்கம் வகித்து, கிறிஸ்தவனாக மாத்திரம் அவர் இருப்பார் (அப்போ 2;47 1.பேதுரு 4;16). வேதாகமத்தை நீங்களே வாசித்து உங்களையே நீங்கள் சீர்தூக்கிப் பார்த்துக்கொள்ளுங்கள்.

5. ஒருவர் தான் கிறிஸ்தவன் என்று உரிமை கொண்டாடுவது மூலம் மாத்திரம் அவர் கிறிஸ்தவராகி விட முடியாது. ஒருவர் உலகில் எத்தனையோ காரியங்களைத் தன்னை குறித்து கூறிக்கொள்ளலாம். ஆகிலும், அவர் கூறிக்கொள்வதெல்லாம் ஆதாரமின்றி, சாட்சியங்களின்றி போகுமானால் பிறகு அவர் ஒரு போலியாக, தூஷணம் பேசுகிறவராக காணப்படுவார். ஆதாரமின்றி யார் வேண்டுமானாலும் வந்து தன்னை ஒரு கிறிஸ்தவன் என்று கூறிக்கொண்டால், அவர் கிறிஸ்தவனாக ஏற்றுக் கொள்ளப்படக்கூடும். ஆனால் அப்படி இருக்கக் கூடாது. தேவனுடைய வசனத்தைக் கொண்டும் தமது வாழ்வைக் கொண்டும் தாம் கிறிஸ்தவன் என்று நிரூபிக்காவிடில், அவர் எதைச் சொல்லிக்கொண்டிருந்தாலும் அவர் கிறிஸ்தவரல்ல (மத்தேயு 7: 21-23).

உங்கள் சுயச்சூழ்நிலையை உணர்ந்து பார்க்கும்படி உங்களை கெஞ்சிக் கேட்டுக் கோள்கிறேன். நீங்கள் ஒரு கிறிஸ்தவர்தானா? வேதாகமம் போதிக்கிறபடியான கிறிஸ்தவரா நீங்கள்? நீங்கள் கர்த்தருக்கு கீழ்படிந்துள்ளீர்களா? அவரிடத்தில் விசுவாமாயிருக்கிறீர்களா? நீங்கள் அப்படியிராவிடில், நீங்கள் கர்த்தரை விசுவாசித்து, உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டு, உங்கள் பாவ மன்னிப்பிற்கென்று ஞானஸ்தானம் பெறுவதன் மூலம் கிறிஸ்தவராக மாறலாம், (மாற்கு16:15.16: அப்போஸ்தலர் 2:38) . கிறிஸ்து உங்களை இரட்சித்து, தமது சபையிலே சேர்த்துக்கொள்வார். அப்பொழுது நீங்கள் கிறிஸ்தவர் என்று மாத்திரம் அழைக்கப்படுவீர்கள் (அப்போஸ்தலர் 2:47:11:26). இறுதியாக, நீங்கள் அவருக்கு உண்மையுள்ளவராக இருப்பின் நித்தியத்திற்கும் நீங்கள் இரட்சிக்கப்படக் கூடும் (ரோமர்.6;23;யோவான் 14: 1-3).

**J.C. Choate** **J.C. சோட்**



# அற்பமாய் எண்ணப்பட்டவள்

**தே**வனுடைய சிருஷ்டிப்பில், உயிருள்ளவைகளில் விலங்கு இனத்திலாகட்டும், மனித இனத்திலாகட்டும் எல்லாம் ஒரே மாதிரியாக இல்லை .தோற்றத்தில் ஒருவேளை சில உயரினங்கள் ஒத்திருந்த போதிலும் பண்புகளில் மாறுபட்டு காணப்படுகின்றன. சில உயிர்கள் சரீர அவயவங்களில் குறைபாடுகளுடன் படைக்கப்பட்டு விடுகின்றன. ஏன் இந்த வேறுபாடு என்று நாம் நம் சிருஷ்டிகரைப் பார்த்து கேள்வி கேட்க இயலாது. அவரால் வனையப்பட்ட பாத்திரங்களாக நாம இருப்பதால் அவரது சித்தத்திற்கு ஒப்புக் கொடுப்பதைத் தவிர தேவனைப் பார்த்து கேள்வி கேட்பதற்கு நாம தகுதியானவர்கள் அல்ல.

ஞானி சாலமோன் அற்பமான ஜெந்துவாகிய எறும்பைப் பற்றி கூறும்போது, **பூமியிலே சிறியவைகளாயிருந்தும், மகா ஞானமுள்ளவைகள் நான்குண்டு. அவையாவன : அற்பமான ஜெந்துவாயிருந்தும், கோடைக்காலத்திலே தங்கள் ஆகாரத்தைச் சம்பாதிக்கிற எறும்பும்** என்று (நீதி 30;24,25) கூறுகிறான். எறும்பு அற்பமாய் எண்ணப்பட்டாலும் ஞானமுள்ளதாயிருக்கிறது. நாம் இங்கு பார்க்கப்போகும் அற்பமாய் எண்ணப்பட்ட ஒரு பெண் ஆதியாகமத்தில் இருக்கிறாள். **லேயாள் அற்பமாள் எண்ண்ப்பட்டாள் என்று கர்த்தர் கண்டு, அவள் கர்ப்பம் தரிக்கும்படி செய்தார்.** (ஆதி.29;31).

இந்த லேயாள் முற்பிதாக்களில் ஒருவரான யாக்கோபின் தாய் மாமனாகிய லாபான் என்பவனின் மூத்த குமாரத்தி, யாக்கோபு தன் தாயாகிய ரெபேக்காளின் தவறான ஆலோசனையால் வயது சென்ற தன் தகப்பன் ஈசாக்கை ஏமாற்றி ஆசீர்வாதத்தை வாங்கிக் கொண்டு தன் அண்ணன் ஏசாவுக்கு பயந்து தன் மாமன் வீட்டிற்கு ஓடிப்போகிறான்., லாபானுக்கு இரண்டு குமாரத்திகள் இருந்தார்கள். மூத்தவள் லேயாள், இளையவள் ராகேல். இந்த லேயாளுடைய கண் கூச்சப்பார்வையுடையதாயிருந்தது.

யாக்கோபு ராகேலை விரும்பி அவளை திருமணம் செய்ய ஏற்பாடுகள் செய்தான். ஆனால் லாபானோ அவனை ஏமாற்றி ராகேலுக்குப் பதிலாக லேயாளை அவனுக்குக் கொடுத்தான். காலையிலே அவள் லேயாள் என்று கண்ட யாக்கோபு லாபானிடத்தில் முறையிட்டான். அதன்பிறகு

ராகேலையும் அவனுக்குக் மனைவியாகக் கொடுத்தான். லேயாளைப் பார்க்கிலும் ராகேலை அவன் அதிகமாக நேசித்தான். ஆகவே, லேயாளை அவன் அற்பாக எண்ணினான். அவளுக்கிருந்த அந்தக் கூச்சப்பார்வையால் யாக்கோபு அவளை பூரணமாய் நேசிக்க இயலவில்லை. இந்த நிலையில் தான் கர்த்தர் அவளைக் காண்கிறார். கர்த்தருடைய பார்வை அவள் மேல் பட்டவுடன் அவள் கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெற்று கர்த்தர் என் சிறுமையைப் பார்த்தருளினார் என்றாள்.

கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதரியே, நாமும் கூட அநேக சமயங்களில் அற்பமாய் எண்ணப்படுகிறோம். ஒரு வேளை நாம், நம் குடும்பத்தில், உறவினர்களிடையில், சமுதாயத்தில், இன்னும் சபையில் உரிய மதிப்புடன் இல்லாமல் இருக்கலாம். நாம் கர்த்தரை தேடும்போது. நம்முடைய பலவீனங்களை அவரிடம் சொல்லி, கண்ணீர்விட்டு ஜெபிக்கும்போது கர்த்தர் உதவி செய்கிறார். பழைய ஏற்பாட்டில் மாபெரும் தலைவனாக இருந்த மோசே திக்குவாயும், மந்த நாவும், உள்ளவனாக இருந்தான்(யாத் 4:10) ஆனால் பிதாவகிய தேவன் அவனைத் தெரிந்து கொண்டு. தம்முடைய ஜனங்களை வழிநடத்திச் செல்வதற்கு தலைவனாக தெரிந்து கொண்டார். அவன் அதை ஏற்க தயங்கும் போது நீ போ, நான் உன் வாயோடே இருந்து நீ பேசவேண்டியதை உனக்குப் போதிப்பேன் என்கிறார் (யாத்.4;12) புதிய ஏற்பாட்டில் நாம் பார்க்கும் போது வைராக்கியமாக இருந்து கிறிஸ்துவின் சபையை பல இடங்களில் ஸ்தாபித்த அப்போஸ்தலன் பவுல், தன் சரீரத்தில் பலவீனப்பட்டிருந்தான். சரீரத்தில் குறையுடன் காணப்பட்டான். **என் மாம்சத்திலே ஒரு முள் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது என்னை விட்டு நீங்கும்படிக்கு நான் மூன்றுதரம் கர்ததரிடத்தில் வேண்டிக் கொண்டேன். அதற்கு அவர் என் கிருபை எனக்குப்போதும், உன் பலவீனத்திலே என் பலம் பூரணமாய்விளங்கும் என்று கர்த்தர் சொல்லி விட்டார்** (2 கொரி. 12:7-9)

**ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்து கொண்டார்; பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்து கொண்டார். உள்ளவைகளை அவமாக்கும்படி, உலகத்தின் இழிவானவைகளையும், அற்பமாய் எண்ணப்பட்டவைகளையும் இல்லாதவைகளையும் தேவன் தெரிந்து கொண்டார்** (1.கொரி.1:27:28). இன்றைக்கு உலகத்தில் கல்விமான்களும், மேதைகளும், உயர்மட்டத்தில் இருப்பவர்களும் உண்மையான சத்தியத்தை புரிந்து கொள்ள மறுக்கிறார்கள், அற்பமாய் எண்ணப்பட்ட நமக்கு புதிய ஏற்பாட்டின் சத்தியம் கொடுக்கப்பட்டுள்ளது. இயேசு கிறிஸ்து தம் இரத்தத்தை சிந்தி

சம்பாதித்த ஒரே சபையை வெகு சிலர்தான் அடையாளம் கண்டு கொண்டுள்ளனர். கல்வி மான்களுக்கு மறைத்து, பேதைகளுக்கும், பாலகருக்கும், வெளிப்படுத்தியுள்ளார். இதையறிந்து நாம் தேவனுடைய பலத்தோடே உண்மைச் சத்தியத்தை ஓங்கி ஒலிக்க வேண்டும். தம்மை உண்மையாய் நேசிக்கிற அவருடைய பிள்ளைகளின் பலவீனத்தை கர்த்தர் பாராமல் இருப்பதில்லை. லேயாள், ரூபன், சிமியோன், லேவி, யூதா, இசக்கார், சேபுலோன் ஆகிய ஆறு குமாரரையும். தீனாள் என்ற குமாரத்தியையும் பெற்றெடுக்கிறாள். யாக்கோபுக்கு பிறந்த 12 பேரும் கோத்திரப்பிதாக்கள் என்றழைக்கப்பட்டனர். அதில் லேயாளுக்கப் பிறந்த லேவியும், யூதாவிம் விசேஷமானவர்கள். லேவி கோத்திரத்தார் ஆசரிப்புக் கூடாரத்தில் ஆசாரிய ஊழியம் செய்யத்தகுதி பெற்றனர். யூதா கோத்திரம் மிகவும் விசேஷமானது. நமதாண்டவராகிய இயேசுகிறிஸ்து யூதா கோத்திரத்தில் அவதரித்துப் பிறந்தார்.

கூச்சப் பார்வையைக் கொண்ட லேயாளின் கர்ப்பப்பிறப்பு விசேஷமான இடத்தைப் பெறுகிறது. ஏனென்றால் கர்த்தர் அவ்ள் அற்பமாக நடத்தப்பட்டதைக் காண்கிறார். அவளுக்கு சரீரத்தில் இருந்த குறை கூச்சப்பார்வை, இன்றைக்கும் நம்மில் அநேகர் பலவீனமுள்ளவர்களாக இருக்கிறோம். கர்த்தர் நம்மைக்காண, நாம் அவருக்கு அனுமதி கொடுக்கவேண்டும். வேதத்தில் நிபந்தனைகளாக கொடுக்கப்பட்ட வைகளை நாம் ஏற்று நடக்கவேண்டும். நமக்கு இருக்கும் குறைகளையே பெரிதாக நினைத்து கர்த்தர் நம்மைக் கொண்டு செய்ய இருக்கும் காரியங்களுக்கு நாமே தடையாக மாறிவிடக்கூடாது. நம்முடைய பலவீனங்களைப் பார்த்து ஒருவேளை மற்றவர்கள், **இது இவன் செய்த பாவமா? இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமா?** என்று யோவான் 9-ம் அதிகாரத்தில் அந்த பிறவிக்குருடனைப் பார்த்து கேட்டதைப் போல நம்மையும் கேள்விகள் கேட்கக்கூடும். தேவனுடைய நாமம் மகிமைப்படுவதற்காகத்தான் இவ்வாறு பலவீனங்கள் காணப்படுகின்றன என்பதே, இதன் விடை.

அற்பமாய் எண்ணப்பட்ட லேயாளின் வயிற்றில் பிறந்த யூதாவினுடைய வம்சத்தை தேவன் ஆசீர்வதித்தது போல அற்பமாய் எண்ணப்படுகிறோமே என்று அங்கலாய்க்கும் ஒவ்வொருவருக்கும் இயேசுகிறிஸ்து போதுமானவராயிருக்கிறார். அவரிடத்தில் எல்லா ஆசீர்வாதங்களும் இருக்கிறது. ஆனால் அவர் நம்மிடத்தில் எதிர்ப்பார்க்கிற காரியங்கள் என்ன என ஆராய்ந்து வேத வசனங்கள் என்ன சொல்லுகிறதோ அதன்படி நடந்தால் நம்மையும் தேவன் கண்டு நம் சிறுமையை நீக்குவார்.

**ரேச்சல் ராஜநாயகம்.**

# விவாக வீட்டில் விண்ணவர்

ஆதியில் இருந்தார், "வார்த்தை" என்பதே அவர் திருநாமம், கொடிய சர்ப்பத்தின் கடும் தலையை நசுக்குவார் என்று வாக்கு மொழிந்தார் தேவன், வார்த்தை மலர்ந்து மனுவுருவானார், ஒளிமங்கிய மனம் கொண்ட மாந்தர்களுக்குள்ளே, மாபெரும் புனித உள்ளம் கொண்டு அன்புருவானார் ஆண்டவர், பாவம் என்னும் காரிருள் பூமிதனை மூடிக்கொண்டிருந்த வேளையில், நீதியின் சூரியனாம் நமது ஆண்டவர். தனது பரிசுத்த கதிர் கரங்களால் பாவ இருள் நீங்கி, மீட்பின் ஒளி மிளிரச் செய்யவேண்டும என்ற பெருநோக்குடன் விண்ணரசுப் பணியை சற்றொப்ப தனது முப்பதாவதுவயதில் தொடங்கிய விந்தை நாதர் செய்த முதலாம் அற்புதத்தை சென்ற மாதத்தில் கவனித்தோம். அதில் நாம் காணாதவர்களை இம்முறை கண்டுகளிப்போம். வாரீர்!

நீதியை நிறைவேற்றும் படி பிரவாகித்தோடிய யோர்தான் நதியில் மூழ்கிய போது, நேசகுமாரன் இவர்தான் என்ற வான் குரல் முழங்கியது. பரிசுத்த ஆவியானவர், புறா உருக்கொண்டு இம்மானுவேலர் மீது இரங்கிய பின், நாற்பது நாள் ஊன் உரக்கமும், உணவுமின்றி வனாந்திரந்தனில் சோதனையின் இருகொம்பொடித்து வெற்றி சாதனையாக்கினார் இறைமைந்தன், அவர் செய்த அற்புதத்தை நாம் அகக்கண்களால் அகம் மகிழ்ந்து காண்கின்ற இவ்வேளையில், அவர் இப்பூமிக்கு வந்த நோக்கத்தை அவர் திருவாய் மலர கேட்போம். "**அடுத்த ஊர்களில் நான் பிரசங்கம்பண்ணவேண்டுமாதலால், அவ்விடங்களுக்குப் போவோம் வாருங்கள், இதற்காகவே புறப்பட்டுவந்தேன்**" என்று சொன்னார். வாலிபர்களே, நமது ஆண்டவர் இப்பூமிக்கு வந்ததின் நோக்கத்தை கவனித்தீர்களா? அற்புதங்கள் அவர் தேவனிடத்தில் இருந்து வந்தவர் என்று சாட்சி பகிரவே செய்யப்பட்டது என்பதை திட்டமும் தெளிவுமாக தெரிந்து கொள்ளுங்கள் எனதருமை வாலிப நெஞ்சங்களே!

## அவர் சொல்லுகிறபடி செய்யுங்கள்

நாதன் மனுவாய் நம்மிடை வந்தபோது, நலிவுற்றோர் நாடி வந்தால், முகம் கோணாமல் ஆவன செய்வார். கானா ஊர் கலியாணத்திற்கு ஊனவதாரம் எடுத்த உத்தமனும் வந்திருந்தார். திருமண இல்லமே மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதக்கும் இந்நேரத்தில் வாலிபர்களாகிய நாமும் அவர்களுடன் அண்டிக் கொள்வோம். சென்ற மாதம் நமது பார்வையை ஆண்டவரின் அன்னையாகிய மரியாளிடம் விட்டுச் சென்றோம். திராட்சை ரசம் குறைவுப்பட்டதைக் குறித்து இயேசுவின் தாயாகிய மரியாள் காட்டிய கரிசனையை கவனிக்கையில், இது ஒரு வேளை மரியாளின் நெருங்கிய உறவின் முறையில் நடந்த திருமணமாகயிருக்கலாம் என்பதைப் போல் தோன்றுகிறது. எகிப்திய நாட்டின் சில தகவல்கள், மரியாள் மணப்பெண்ணுக்கு சகோதரியாயிருக்கலாம் என்று கூறுகிறது. வேறு சில தகவல்களோ, இது அப்போஸ்தலன் யோவானின் பரிசுத்த மெய் விவாகமாக இருக்கலாம் என்று கூறுகிறது.

"**என் வேளை இன்னும் வரவில்லை**" என்று கர்த்தர் கூற கேட்டமரியாள், மனம் தளராமல், ஊறும் திராட்சைச் சாறு என்று தனது மனத்தில் எண்ணி, "**அவர் சொல்லுகிறபடி செய்யுங்கள்**" என்று வேலையாட்களை வேண்டினாள். வாலிபர்களே, தாய் சொல்லும் காரியத்தைக் கண்ணுற்றீர்களா? ஆவிக்குரிய எல்லா விஷயத்திலும் நமது அன்பின் ஆண்டவர் என்ன கட்டளையிட்டிருக்கிறார் என்பதைக் கவனித்து, அதையே பின்பற்றும்படி முயற்சிசெய்யவேண்டும். மனுஷர் நமக்குச் சொல்லும் மிகச் சிறந்த அறிவுரையைக் காட்டிலும். நமது அறிவுக்கு எட்டாத காரியமாக இருந்தாலும் ஆண்டவரின் சத்தத்திற்கு மாத்திரம் செவிகொடுத்து அவர் சித்தமே செய்தல் வேண்டும்.

பல்லாண்டு, பாலைவனம், போலிருந்து எல்லாமும் இழந்துவரும் இஸ்ரேலை வாழ வைக்க வந்த திருக்குமாரன், இழந்தோர் இடத்தே இரக்கம் மிகுந்து, மனதுருக்கத்தால் நிறைந்து காரியங்கள் ஆற்றும் தன்னிகரில்லா இயேசு பிரான், கற்சாடி சிலவற்றைத் தன் கண்ணாலே கண்டு, விற்போன்ற புருவமுயர்த்தி, வேலைக்காரரிடம், கற்சாடிதனில் நீரை நிறைய நிரப்பிடுக எனக் கட்டளையிட்டார் கருணை நாதர். வாலிபர்களே, இப்பொழுது நாம் நம் பார்வையை பந்தி பரிமாறும் வேலைக்காரரிடம சற்றே திருப்புவோம், சில பாடங்களைக் கற்றுக் கொள்ள முயற்சிப்போம்.

"யூதர்கள் தங்களைச் சுத்திகரிக்கும் முறைமையின்படியே ....ஆறு கற்சாடிகள் அங்கே வைத்திருந்தது. (யோவான் 2;6) யூதர்களின் எல்லா விசேஷங்களிலும் இப்படிப்பட்ட கற்சாடிகள் இருக்குமாம், வெளியிலிருந்து வருபவர்கள் தங்களை சுத்திகரிக்க வசதியாக இப்படி வைக்கப்பட்டிருக்கும்., பாலஸ்தீனா நாடு மலைகளாலான பட்டணமாகயிருந்ததால், சிறந்த சாலைகள் அமைப்பது நடைமுறைக்கு ஒவ்வாததாக அன்றைய கால கட்டத்திலிருந்தது. யூதர்கள் மேற்கொண்ட பயணத்தினால், சாலைகளிலிருந்த புழுதி அவர்கள் கால்களில் படிந்திருக்கும் ஆகையால், அதை நீக்கும்படி கால்களையும், சடங்கிற்காக கைகளையும் வழக்கமாக யூதர்கள் கழுவுவதுண்டு. திருமண நாளில் அதிக கூட்டம், அவ்விவாக வீட்டிற்கு வந்ததால், 6 கற்சாடிகளும் காலியாகி இருக்கலாம் எனக் கூறப்படுகிறது. இப்படி, அலைமோதிய கூட்டத்தால் தானோ ரசமும் குறைவுபட்டிருக்கும் என்று நாம் யூகிக்கலாம்.

திருமணத்தில் திராட்சைரசம் குறைவுபட்ட வேளையில், நறுமணப் புது ரசத்தை தனது வல்லமையினால் வானவர் வாரிவழங்கும் போது, அவர் தண்ணீர் வைக்கப்பட்டு தீர்ந்துபோன கற்சாடிகளில் நீரை நிறைய நிரப்புங்கள் என்று நவின்றார் என்பதை நாம் அறிவோம். இயேசுவின் ஊழியத்தில் அவரை எதிர்த்தவர்களும், பொறாமையினால் அவர் செய்யும் அற்புதங்களை கண்டும் நம்ப மறுத்தவர்களும், இவர் ஏற்கனவே திராட்சை ரசம் இருந்த ஜாடிகளில் தண்ணீரை ஊற்றிக்கொடுத்து விட்டார் என்று நயவஞ்சக கூற்றையும் கூற முடியாதபடி செய்துவிட்டார். நீரை விளிம்பு வரை நிரப்பினார்கள் என்பதை நாம் நிதானிக்கையில் , முதலில் அரை குறையாக தண்ணீர் ஊற்றித் அதன்பிறகு

திராட்சை ரசம் ஊற்றி. அதை கலக்கிய பின் பரிமாற கொடுத்து விட்டார் என்று பரமன் செய்த அற்புதத்தை சில உத்தம புருஷர்கள் உதறி தள்ளியுமிருக்கலாம்.

வாலிபர்களே, விவாகத்திற்கு விண்ணவரின் சீடர்களும் அழைக்கப்பட்டிருந்ததாக விவிலியம் விளம்புகிறது என்பதை நீங்கள் கவனித்திருப்பீர்கள். இயேசுவின், நாவிலிருந்து தண்ணீர் நிரப்புங்கள் என்ற கட்டளை பிறந்திருந்தால், சுழல்கின்ற பம்பரம் கூட விசை குறைந்தபின் நின்றுவிடும், இவர்களோ அரச கட்டளையை, சிரமேற்கொண்டு சீற்றமுடன் சலிக்காமல் இட்டபணியை செவ்வனே செய்திருப்பார்கள், ஆனால் விஷமிகள் சிலரோ, இயேசுவும், சீடர்களும், சதி செய்ததால் தான் இயற்கை விதி மாற்றப்பட்டது போல உங்களுக்கு தெரிகிறது என்று இவ்வற்புதத்தை நம்பியவர்களிடம் நாகூசாமல் சொல்லியிருப்பார்கள். மெய் ஞான வேந்தனுக்கு இவைகளெல்லாம் தெரியாமலா இருந்திருக்கும், நிச்சயம் அவர் இதை அறிந்துதான், தன் செயல்பாட்டை இப்படி அமைத்திருப்பார் என்பது சூரியோதயம் போல் சந்தேகமற்றது.

இளமை பருவத்தை இனிதே அனுபவிக்கும் வாசகர்களே, நமது வியப்பு நிறைந்த பார்வையை பணியாளர்கள் மீது, காலை பனி படர்வதுபோல படரவிடும் போதும், இயேசு தங்களை தண்ணீர் எடுத்துப் பரிமாறும்படி சொல்லும்போதும் சரி, காரியங்கள் நம்புவதற்கு கடினமாக இருந்த போதிலும், மனித அறிவுக்கு எட்டாததாக, புலப்படாததாக, இருந்த போதிலும் இவர்கள் இயேசுவின் இக்கட்டளையை இம்மியும் பிசகாமல் செய்து முடித்தார்களே! அதைப்போலவே நாமும் காரண காரியங்களையும், நமது அறிவுக்கு அப்பாற்பட்டதாக இருந்தாலும் இயேசு சொல்லும் ஒவ்வொரு கட்டளையையும் நிறைவேற்ற வேண்டும். வாலிபர்களாகிய நாம் இதை நம் வாழ்வில் அறிந்து செயல்படுவது மிகவும் அவசியிமானதாகும்.

வேலைக்காரர்களின் கீழ்ப்படிதலைக் கண்டு நிலை குத்தி நிற்கும் நமது விழிகளை பந்தி விசாரிப்பவனிடம் திருப்புப்போது, நமது செவிகளும் அவன் மணவாளனிடம் சொல்லும் இக்காரியத்தை கேட்காமலிருக்காது, "**எந்த மனிஷனும் முன்பு நல்ல திராட்சரசத்தைக் கொடுத்து, ஜனங்கள் திருப்தியடைந்தபின்பு. ருசி குறைந்ததைக் கொடுப்பான், நீரோ நல்ல ரசத்தை இதுவரைக்கும் வைத்திருந்தீரே**" என்றான். (யோவான்.2;6) என்ன ஒரு அருமையான வாக்குமூலம் பாருங்கள், இயேசு ஜனங்களின் வாழ்க்கை எப்படி மாற்றுகிறார் என்ற விந்தையை அவன் அன்று விளங்கிக்கொள்ள முடியாமல் வாய் திறந்து சொல்லிவிட்டான். கிறிஸ்துவோடு நாம் சேர்ந்து நிற்கையில், மேன்மையானது இறுதியில் வரும் என்பது உறுதி. ஆகவே எனதருமை வாலிப உள்ளங்களே! நாம் கல்வாரி நாயகனாகிய இயேசுவோடு வழுவிடாமல் நிற்போம். பேராசீர்வாதாம் பெறுவோம்! ஆமென்.

**ஜே. பிக்கின்ஸ்**

# எரேமியா ஒரு கண்ணோட்டம்

ஆசிரியர் : **எரேமியா தீர்க்கன்**

காலம் : **ஏறக்குறைய கி.மு. 600**

## இந்நூலைப்பற்றி...

1. எரேமியா என்ற பெயருக்கு **யெகோவா தேவன் நியமிக்கிறார்** என்று பொருள்படும்.
2. எரேமியா தீர்க்கன், ஆசாரிய குடும்பத்தில் பிறந்தவன். அவனுடைய சொந்த ஊர் எருசலேமிலிருந்து 3 மைல் தூரத்தில் வடகிழக்கில் அமைந்திருக்கும் ஆனதோத் பட்டணமாகும்.
3. யூதாவின் அடிமைத்தனத்தின் காலம் 70 வருடமாக இருக்கும் என்று முன்னுரைத்த ஒரே தீர்க்கதரிசி. (எரே.25;11)
4. எரேமியா தீர்க்கன் எழுதிய நூல்கள் முழுவேதாகமத்தில் இருபதில் (20:1) ஒரு பங்கு இருக்கிறது.
5. யோசியா ராஜாவின் பதிமூன்றாவது வருடத்திலிருந்து, சிதேக்கியா ராஜாவின் பதினோராவது ஆண்டுவரை தீர்க்கதரிசனமுரைத்தார் எரேமியா.
6. எரேமியா தன் நூலில் தேவன் புதிய உடன்படிக்கை செய்யப்போகிறார் என்பதைக் கூறுகிறார்.(31;31)
7. எரேமியா தீர்க்கனின் புத்தகம் காலக்கிரமத்தின்படி ஒழுங்குப'டுத்தி எழுதப்படவில்லை என்பதால், இந்நூலை புரிந்து கொள்வதில் சில சிரமங்கள் இருக்கிறது.

## இந்நூலின் செய்தி...

1. தேவன், தன் சித்தத்தை நிறைவேற்ற புறஜாதியாரையும் பயன்படுத்துகிறார்,
2. நாம் நமது பங்கை சரிவர செய்யும்போது, தேவனும் அவர் பங்கை சரியாக செய்வார் என்பது உறுதி.
3. தெய்வபயம் இல்லாதவர்களின் ஜெபம் கேட்கப்படுதில்லை.
4. தேவனுடைய எல்லா வாக்குத்தத்தமும் நிபந்தனைகளை கொண்டதாகவே இருக்கிறது.

சிறுவர் பகுதி :

# சிருஷ்டிப்பின் அதிசயம்

**தே**வனுக்குப் பிரியமானவர்களும், என் அன்புக்குரியவர்களுமான சிறுதம்பி, தங்கைகளே, உங்கள் யாவருக்கும் நம்மைப் போன்றவர்களிடத்தில் பெரிதும் அன்பு காட்டுகின்ற இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இவ்வருடத்தின் மூன்றாம் மாதத்திலே நம் தேவனுடைய மகத்துவத்தை பற்றி சில காரியங்களை அறிந்து கொள்வோமா? வாருங்கள் என்னோடு!

மனிதனுடைய வரலாறு காலம் முழுவதும் தேவன், அநேக அற்புதங்களை அருமையாகச் செய்துள்ளார். செங்கடலைப் பிளந்து இஸ்ரவேலர்களை எகிப்திய படைகள் அழிக்காமல் பார்த்துக் கொண்டார் (யாத் 14;21-24.) யாருடைய கையும் படாமலே எரிகோவின் மதில் நொறுங்கி விழும்படி செய்தார் (யோசுவா.6,20) இஸ்ரவேலர்கள் தங்களுடைய எதிரிகளை தோற்கடிக்க சூரியனை நடுவானில் நிறுத்தினார். ( ). அக்கிரமக்கார கையில் அகப்பட்ட தன்குமாரனை மரித்து மூன்று நாளைக்குப் பிறகு, உயிரோடே எழுப்பினார்.



ஆனால், சிருஷ்டிப்பின் அதிசயம் மாத்திரம் நடந்திராவிட்டால், மேலே நாம் பார்த்த இந்த அற்புதங்களெல்லாம் நடந்திருக்க வாய்பேயில்லை. மோசே ஆதி 1;1-ல் எழுதும்போது "**ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்**" என்று எழுதியிருக்கிறார். அவர் அப்படி எழுதும்போது எல்லா அதிசயங்களிலும் பெரிய அதிசயத்தை ஒரே வரியில் சுருக்கி எழுதிவிட்டார். அது தான் சிருஷ்டிப்பின் அற்புதம். ஆறே ஆறு நாட்களுக்குள்ளாக, தேவன் கிரகங்கள், நட்சத்திர கூட்டங்கள், மற்றும் குறுங்கோல்களையும் உள்ளடக்கிய வான மண்டலங்கள் அனைத்தையும் நடைமுறைக்கு கொண்டு வந்து விட்டார். எபிரேய ஆசிரியர், "**விசுவாசத்தினாலே நாம் உலகங்கள் தேவனுடைய வார்த்தையினால் உண்டாக்கப்பட்டதென்றும், இவ்விதமாய், காணப்படுகிறவைகளால் உண்டாகவில்லையென்றும் அறிந்திருக்கிறோம்**" (எபி.11.3) என்று சொல்லியுள்ளார். தேவன் சிருஷ்டிப்பை நடத்தினபோது, ஏற்கனவே இருந்த பொருளையும். சக்தியையும பயன்படுத்தவில்லை. தன்னுடைய "**வார்த்தையின் வல்லமையினாலே**"

பேசினார், அவை உண்டாயிற்று. (எபி.1;3).

தேவன் விசேஷித்த ஒன்றான, பூமியையும் படைத்தார். அதன்மீது, அவர் உயிருள்ள செடி, கொடி களையும், மிருகங்களையும், மனிதனையும் ஏற்படுத்தினார். அப்பொழுது தேவன்: பூமியானது புல்லையும், விதையைப் பிறப் பிக்கும் பூண்டுகளையும், பூமியின் மேல் தங்களில் தங்கள் விதையையுடைய கனிகளைத் தங்கள் தங்கள் ஜாதியின்படியே கொடுக்கும் கனிவிருட்சங்களையும் முளைப்பிக்கக்கடவது என்றார்; அது அப்படியே ஆயிற்று. பூமியானது புல்லையும், தங்கள் தங்கள் ஜாதியின்படியே விதையைப் பிறப்பிக்கும் பூண்டுகளையும், தங்கள் தங்கள் ஜாதியின்படியே தங்களில் தங்கள் விதையையுடைய கனிகளைச் கொடுக்கும் விருட்சங்களையும் முளைப்பித்தது; தேவன் அது நல்லது என்று கண்டார் என்று கூறுகிறது. (ஆதி.1.11,12) **உண்டாகக்கடவது** என்றவுடன், அவைகள் உண்டாயிற்று என்பதைக் கவனிக்கவும். தேவன் பேசி கட்டளையிட்டார். அவை அப்படியே ஆயிற்று தேவன், ஆகாய விரிவிலே சுடர்கள் உண்டாகக்கடவது என்றார்? ஆதி. 1;14,15, அது அப்படியே ஆயிற்று அப்படி ஆவதற்கு இலட்சக் கணக்கான, கோடிக்கணக்கான ஆண்டுகள் ஆகவில்லை. உடனே ஆயிற்று.

ஆறாம் நாளில்,தேவன், " **நமது சாயலாகவும், நமது ரூபத்தின் படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக**" என்றார் (ஆதி.1;26). ஆதி2;7 ம் வசனம், தேவன், மனிதனை, பூமியின் மண்ணினாலே உருவாக் கினார் என்று சொல்கிறது. அதன்பிறகு, அவனுடைய விலா எலும்பிலிருந்து மனுஷியை உண்டாக்கினார். (2;21-22),

இவைகள் எல்லாம் "**இயற்கையாய் நடந்தவை**" அல்ல. அதற்கு நேர் மாறாக, இயற்கைக்கு அப்பாற் பட்டவை.

இப்பிரபஞ்சமானது, ஏதோ ஒன்று வெடித்துச் சிதறியதால் திடீரென்று உண்டாகவில்லை. மனுஷன் "**குரங்கைப் போன்ற**" முன்னோர் களிலிருநது வெளிவந்தவனுமல்ல. இப்பிரபஞ்சமும், அதில் உள்ள அனைத்தும் அதிசயமான தேவனால் சிருஷ்டிக் கப்பட்டது.

சங்கீதக்காரன் சொல்லும்போது, "**பூமியெல்லாம் கர்த்தருக்கப் பயப்படுவதாக உலகத்திலுள்ள, குடிகளெல்லாம் அவருக்க அஞ்சியிருப்பதாக. அவர் சொல்ல ஆகும் கட்டளையிட நிற்கும்**" (33:8-9) என்கிறார். இப்பிரபஞ்சத்தையும், பூமியையும், செடிகளையும், மிருகங்களையும், மனுஷனையும், தேவன், இயற்கையான தொடர் நிகழ்வுகளை கொண்டு சிருஷ்டிக் கவில்லை என்று நமக்கு சொல்லும் வேதாகம வழிமுறை இதுவே., இதற்கு மாறாக, தேவன் ஒரு மிகப்பெரிய அதிசயத்தைப் செய்தார். அதுதான் "**சிருஷ்டிப்பின் அதிசயம்**" நாம் இன்று இங்கிருப்பது அந்த அதிசய நிதழ்வினால்தான்., ஆகவே, நாம், அன்பும் வல்லமையும் கொண்ட தேவனை நம் பரமபிதாவாக கொண்டிருப்பதற்காக நன்றியுள் ளவர்களாய் இருக்கவேண்டும்.

அருமை தப்பிகளே! தங்கைகளே, நாம் நன்றியுள்ளவர்களாய் இருப்போம். நல்லாசீர்வாதம் பெறுவோம்.ஆமென்.

மனன வசனம் : சங்கீதம் 33 : 8,9

தமிழில்: **R.A.R. NAYAGAM**

# வெளிப்படுத்தின விசேஷம்

அதிகாரம். 20:5-10.



**சா**த்தான் கட்டப்பட்டிருக்கும் ஆயிரம் வருட காலமும், இந்த இரத்த சாட்சிகள் கிறிஸ்துவுடன் ஆளுகை செய்யும் ஆயிர வருட காலமும் ஒரே சமயத்தில் நடக்கிறதாக உள்ளது (வெளி.20;1-4). ஆகையால், இந்த வசனங்கள், இயேசுக்கிறிஸ்துவின் ஆளுகையின் ஒட்டுமொத்த காலத்தைக் குறிக்காமல், கிறிஸ்துவின் ஆளுகையின் ஒரு குறிப்பிட்ட காலத்தைப் பற்றியே பேசுகிறது.

இங்கே கேள்வி என்னவெனில், வசனப்பகுதி வெளி.20; 1-6-ல் , எந்த "ஆயிரம் வருட காலத்தைக்" குறித்துப் பேசுகிறது? என்பதே. முதலாவது, இந்த உலகத்தின் முடிவுக்கு முன்பாக, சாத்தான் ஆயிரம் வருடம் கட்டப்படுதலும், இரத்த சாட்சிகள் கிறிஸ்துவுடனே ஆயிரம் வருடம் ஆளுகை செய்வதும், இந்தப் பூமியில் நடக்கிறதென்று நமக்குத் தெரியும்..

இது, கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்பாக கண்டிப்பாக நடக்கக் கூடியது, ஏனெனில்; 1. ஆயிர வருட அரசாட்சியின் முடிவில், ஜாதிகளை மோசம்போக்குகும்படி சாத்தான் விடுதலையாக்கப்பட்டிருக்கிறான் (வெளி,20;3,7,8). கிறிஸ்து மீண்டும் வந்ததற்குப் பிறகு, விடுதலையாக்கப்படாமல், நியாயந்தீர்க்கப்பட்டு, நித்திய காலத்திற்கு அக்கினிக்கடலில் தள்ளப்படுவான் (20;7-10). ஆகவே, சாத்தான் உலகத்தின் முடிவுக்கு முன்பாக விடுதலையாக்கப்பட்டிருக்கிறான். 2. இந்த ஆயிர வருட காலத்தின்போது, தன்னுடைய இரத்தசாட்சிகளான சீடர்களோடு கிறிஸ்து ஆளுகை செய்து கொண்டிருக்கிறார். (வெளி.20;4). அந்த சீடர்களோடு கிறிஸ்து இருக்கிறார். அந்த ஆயிர வருட காலம் வரை கிறிஸ்து பூமிக்குத் திரும்பவில்லை. 3. அந்த ஆயிரம் வருடம் முடியுமளவும், மரணமடைந்த மற்றவர்கள் உயிரடையவில்லை (வெளி.20;5). கிறிஸ்து வரும்போது உயிர்த்தெழுதல் நடக்கும். அதற்கு முன்பாக இருக்காது. (மத்.25;31-33; 1.தெச.4; 14-17). ஆகையால், அந்த ஆயிர வருட காலத்துக்குப் பிறகே உயிர்த்தெழுதல் நடக்கும். இதன்பொருள், அந்த ஆயிர வருட காலத்துக்கப் பிறகே உயிர்த்தெழுதல் நடக்கும். இதன்பொருள், அந்த ஆயிர வருட ஆளுகை உலகத்தின் முடிவுக்கு முன்பாக நடக்கும். ஆகையால், இந்த ஆயிர வருட அரசாட்சியைப் பற்றிய ஒரு நியாயமான கேள்வி யாதெனில்,

ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து, உலகத்தின் முடிவு வரையிலான காலத்தின், எந்தக் கால கட்டத்தில் இந்த ஆயிர வருட காலம் இருக்கும் என்பது?.

இந்தக் கேள்விக்கான சரியான பதிலைப் பெற்றுக் கொள்வதற்கு, சபையின் துவக்கம் முதல், பரலோகத்திலுள்ள நித்திய வீட்டிற்கு, சபையை, கர்த்தர் திரும்ப வந்து கொண்டு போகும் வரைக்குமான சரித்திரத்தை திறனாய்வு செய்வது பிரயோஜனமாயிருக்கும். இந்தக் கால கட்டத்தை, வேதவாக்கியம், மூன்று தெளிவான கட்டங்களாகப் பிரிக்கிறது. 1. பெந்தெகொஸ்தே நாளிலிருந்து, ரோம் வீழ்ச்சியடையும் வரையிலான காலம் (கி.பி.476) இது கிறிஸ்துவின் சபையின் துவக்கம் மற்றும் ஆரம்பகட்ட வளர்ச்சிக் காலமாகும். கி.பி.30-ல் பெந்தகொஸ்தே நாளில், சபையானது துவங்கப்பட்டு (அப் 2) வெகு வேகமாக வளர்ந்தது. ஆனாலும், ரோம அரசாங்கத்திடமிருந்து கடுமையான துன்புறுத்தலைச் சந்தித்தது. 2. ரோமின் வீழ்ச்சியிலிருந்து . கி.பி. 1000 வருடம் வரை சபையானது ரோமை மேற்கொண்டு பூமியனைத்தையும் நிரப்பி பெரிய கன்மலை ஆயிற்று (தானி.2;34,35,44, 2.44,45,7;17-11,8,27, ஏசா.2; 2-4; மீகா 4;1-3 வெளி.11;15). இந்தக் கால கட்டம், சரித்திர ஆசிரியர்களால், **சபையின் காலம்** என்றழைக்கப்படுகிறது. 3. கி.பி.1000 லிருந்து, நமது காலம் வரை, (இன்னும் உலகத்தின் முடிவுவரையிலான காலம்,) சபையானது "வழிவிலகி போகும்." என்று வேதாகமத்தால் முன்குறிக்கப்பட்டுள்ளது. (2,தெச.2;144, 1.தீமோ.4;1). இக்காலத்தில் மீந்திருக்கும், உண்மையுள்ள சபைகளைத் தவிர்த்து, பெரிய அளவில் பின்மாற்றமடைந்து போகும். இச்சமயம் தான், பிரிவினைச் சபைகளும், பொய் மதங்களும் எழும்புகின்ற காலமாக இருக்கும்.

நாம் இப்பொழுது பார்த்த மூன்று காலகட்டத்தின், முதலாவதில், ரோம அரசாங்கமானது, கர்த்தருடைய சபையைத் திட்டமிட்டுத் துன்புறுத்தி முற்றிலுமாக அழிக்க முயற்சித்தது, ஆனால் வெற்றியடைய முடியவில்லை. இருப்பினும். நேரம் அரசாங்கம் மேற்கொண்ட முயற்சியானது, ஜனங்கள் மோசமாக்கப்பட்டார்களென்பதையும், சாத்தான் இன்னும் கட்டப்படவில்லையென்பதையும் விவரிக்கிறது. எவ்வித சந்தேகத்திற்கும் இடமில்லாமல், சபை வழிவிலகி போனதிலிருந்து, எப்பொழுதும், போல ஜனங்கள் மோசம் போனார்கள், கண்டிப்பாக, சாத்தான் இக்காலகட்டத்தில் கட்டப்பட்டிருக்கவில்லை, ஏனெனில், இச்சமயத்தில் தான், பல பொய் மதங்கள் எழும்பி. ஒவ்வொரு தேசத்திலும் நிலைபெற்றது. உண்மைநிலை இப்படியிருப்பதால், சாத்தான் 'கட்டப்படுவதற்கு, அடுத்த கால கட்டம் தான் தோதானது என்று இது காட்டுகிறது. சபையின் காலம் என்றழைக்கப்பட்ட கால கட்டத்தில் சாத்தான் இன்னும் எல்லா மனிதரையும் சோதிக்கும்

திறனுடையவனாகவே இருந்துள்ளான். தேவனுக்கு உண்மையில் ஊழியஞ் செய்ய ஒப்புக்கொடுத்தவர்கள் மாத்திரம் இரட்சிக்கப்பட்டார்கள். ஆனால், இந்த கால கட்டத்தில், உலகத்தின் மீது சபையானது ஆதிக்கம் செலுத்தியது. சரித்திரத்தின் எந்தவொரு கால கட்டத்திலும் இல்லாத அளவில், கிறிஸ்துவின் சபையின் செல்வாக்கின் கீழாக ஜனங்கள் வந்தார்கள். விழுந்து போகும் காலத்திற்கு முன்னான சபையின் காலம், சாத்தான் கட்டப்பட்டிருக்கும் காலத்துக்கு மிகவும் ஒத்துப்போகிறது. கர்த்தருடைய உண்மையுள்ள இரத்த சாட்சிகள் அவருடன் ஆளுகை செய்கிறார்கள் என்பதை குறிப்பதற்கான ஏற்ற காலமாயிருக்கிறது. இக்கால கட்டம் பல நூற்றாண்டுகளுக்கு நீடித்தது., இந்தக் கால கட்டத்தை முன்குறித்துச் சொல்வது, "**ஆயிரம் வருடம்**" என்பதற்குச் சரியான அடையாளமாயிருந்திருக்க முடியும். இக்கால கட்டம், உண்மையுள்ள சிறிஸ்தவர்களுக்காக வைக்கப்பட்டிருக்கும் நித்திய ஆசீர்வாதங்கள் பற்றிய மெலெழுந்தவாரியான கண்ணோட்டத்தைக் கொடுக்கிறது. நாம் கர்த்தரோடு சில வருஷங்களுக்கு மாத்திரமல்ல, என்றென்றும் வாழ்ந்து (வெளி.22;5). தலைமுறை தலைமுறைக்கும் சதா காலங்களிலும் தேவனை மகிமைப்படுத்துவோம் (எபே.3;21). இப்பொழுது நாம் இங்கே. பார்த்தது, ஆயிரம் வருட காலத்தைக் குறிப்பதற்கானதொரு அடையாளமாயிருக்கும் வாய்ப்புண்டேயொழிய, இதுதான் அது என்று நாம் அறுதியிட்டுச் சொல்லிவிட முடியாமென்பதைக் கண்டிப்பாக நினைவில் கொள்ளவேண்டும். இதே போலத்தான், கீழே நாம் பார்க்க இருக்கும் "**முதலாம் உயிர்த்தெழுதலும்**".

வெளி.20;5, "மரணமடைந்த மற்றவர்கள் அந்த ஆயிரம் வருடம் முடியுமளவும் உயிரடையவில்லை. இதுவே முதலாம் உயிர்த்தெழுதல்" என்று சொல்கிறது. அந்த ஆயிரம் வருடம் முடிந்த பின்பு ஏதாவது ஒரு கட்டத்தில் உயிர்த்தெழுதல் இருக்கும் (உடனடியாக நடக்கும் என்று சொல்லவில்லை). அது, இறுதியில் நடக்கும் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவன் பாக்கியவான், பரிசுத்தவானுமாயிருக்கிறான்; இவர்கள் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக ஆசாரியராயிருந்து. அவரோடே கூட ஆயிரம் வருஷம் அரசாளுவார்கள் என்று கூறுகிறது. முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கடைந்தவர்கள் தான், கிறிஸ்தவுடன் ஆயிரம் வருடம் அரசாளுகிறவர்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது. ஆனால், இவர்கள் சரீரப்பிரகாமாக மரணமடைந்து, உலகத்தின் முடிவுக்கு முன்பாகவும், இறுதி உயிர்த்தெழுதலுக்கு முனபாகவும், ஆளுகை செய்கிறவர்கள். (20;4-5). இந்தப் பகுதியானது, முதலாம் உயிர்த்தெழுதல் என்பது, நீதிமான்களின் மரணத்தின்போது, அவர்களுடைய ஆவி பிரிந்து, பரதீசுக்குச் செல்வதாக இருக்கலாமென்று சொல்கிறது (லூக்கா.16;19 - 26; 23;43). அவர்கள் சரீரத்தில்

மரித்திருந்தாலும், பரதீசில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். காரியங்கள் இப்படியானால், சரீர மரணத்தைச் சந்திக்கிற எல்லா உண்மையுள்ள கிறிஸ்தவர்களும் (கிறிஸ்து வரும்போது உயிரோடிருக்கிறவர்கள் தவிர, ஏனைய அனைவரும்), இந்த நூலில் சொல்லப்பட்டுள்ள இந்த ஐந்தாம் ஆசீர்வாதத்தில் பங்கடைவார்கள். அவர்கள் முதலாம் மரணத்தில் (சரீர மரணத்தில்) பங்கடைவதால். **"இரண்டாம் மரணத்திற்கு"** (நரகம்) அவர்கள் மேல் அதிகாரமில்லை. **"ஜெயங்கொள்ளுகிறவன் இரண்டாம் மரணத்தினால் சேதப்படுவதில்லை"** (வெளி.2;11). இரண்டாம் மரணமென்பது, நித்திய அக்கினிக்கடல், அதாவது, நரகம். (வெளி. 20;14;21;8) . முதலாம் உயிர்தெழுதலானது, பரதீசிலுள்ள ஆபிரகாமின் மடியில் சேர்ந்து கிடைக்கும் தேற்றப்படுதல் என்பதானால், கர்த்தர் வரும்போது நீதிமாக்களுக்கான இறுதி உயிர்த்தெழுதல் என்பது. ஒருவேளை "அடுத்த" அல்லது "இரண்டாம்" உயிர்த்தெழுதல் போல் தோன்றும். இங்கே, இப்படியிருக்க வாய்ப்புண்டு என்று சொல்லுகிறோமே தவிர திட்டமாக இப்படித்தான் என்று சொல்லவில்லையென்பதை நினைவில் கொள்ளுங்கள். வெளி.20;5 ல், இந்த ஆசீர்வாதத்தைப் பெறுவதற்குப் பரிசுத்தமாயிருக்கவேண்டியது ஒரு நிபந்தனையாகச் சொல்லப்பட்டிருக்கிறதையும் நினைவு படுத்துகிறது. தேவன் பரிசுத்தமுள்ளவராயிருக்கிறார். ஆகவே, நாமும் பரிசுத்த முள்ளவர் களாயிருக்க வேண்டும். (1.பேதுரு.1;15,16). பரிசுத்தமில்லாவிட்டால் தேவனை ஒருபோதும் தரிசிக்க முடியாது (எபி.12;14). எல்லாக் கிறிஸ்தவர்களும் தேவனுடைய ஆசாரியர்களாயிருக்கிறார்கள் (1.பேதுரு.2;5,9), அந்த ஆசாரியத்துவம் இந்த வாழ்க்கைக்குப் பிறகும் நீடிக்கிறது. வெளி. 20;6-ல் சொல்லப்பட்டிருக்கும் இந்த ஆசீர்வாதங்கள் மகத்தானவைகள்.

வெளி.20;1-3 வசனங்களில், சாத்தான் ஆயிரம் வருடங்களுக்குக் கட்டப்பட்டிருப்பது, தனிப்பட்டவர்களை மோசம்போக்க இயலாதபடி செய்யவில்லை என்றுபார்த்தோம். மாறாக, இப்படிக் கட்டப்பட்டது அவனுடைய செயல்பாட்டில் ஒரு கட்டுப்பாட்டை ஏற்படுத்தியது. இந்தக் கால கட்டத்தில், சாத்தான் ஜனங்களை மோசம் போக்க முடியவில்லை. ஆனால், அதன்பின்பு ஜனங்களை மோசம்போக்க அவன் மீண்டும் விடுதலையாகவேண்டும் (வெளிள.20;2,3). இதைத்தான் அப்படியே வெளி.20;7,8 ல் பார்க்கிறோம். இந்த வசனங்கள், "அந்த ஆயிரம் வருஷம் முடியும்போது சாத்தான் தன் காவலிலிருந்து விடுதலையாகிய பூமியின் நான்கு திசைகளிலுமுள்ள ஜாதிகளாகிய கோகையும், மாகோகையும், மோசம்போக்கும்படிக்கும், அவர்களை யுத்தத்திற்குக்கூட்டிக் கொள்ளும் படிக்கும் புறப்படுவான்; அவர்களுடைய தொகை கடற்கரை

மணலத்தனையாயிருக்கும்"**சாத்தான் விடுதலையானவுடன், அவன் மீண்டும் ஜனங்களை மோசம் போக்குகிறான். வசனம் 8, சாத்தான்** "பூமியின் நான்கு திசைகளிலுமுள்ள" எல்லா ஜனங்களையும் மோசம் போக்கத் தீர்மானம் கொண்டிருக்கிறான் என்பதைக் காட்டுகிறது. நான்கு திசைகளிலுமுள்ள ஜாதிகள் என்று சொல்லும்போது, அது உலகம் முழுமையையும் குறிக்கும். உலகம் முழுமையும், ஒட்டு மொத்தமாக கோக், மாகோக் என்று குறிக்கப்பட்டுள்ளது. சாத்தான் கோகையும், மாகோகையும் யுத்தத்திற்குக் கூட்டிச் சேர்க்கும்போது, ஒரு குறிப்பிட்ட தேசத்தையோ அல்லது சில தேசங்களையோ அவன் சேர்ப்பதில்லை. மாறாக, சாத்தான், கடற்கரை மணலைப்போல் தொகையிடமுடியாத உலகமனைத்தையும் கூட்டிச் சேர்க்கிறான். வசனம்9, யாருக்கு எதிராக யுத்தம் செய்யும்படி சாத்தான் உலகத்தை உபயோகிக்கிறான் என்று வெளிப்படுத்துகிறது. "**அவர்கள் பூமியெங்கும் பரம்பி, பரிசுத்தவான்களுடைய பாளையத்தையும், பிரியமான நகரத்தையும் வளைந்து கொண்டார்கள்**". பூமியெங்கும் பரம்பி என்பதன் பொருள் உலகமனைத்தும் என்பது. சாத்தானின் வேலைக்காரர்களாகிய உலகத்தின் தேசங்கள் தேவனுடைய மனிதர்கள் எங்கிருந்தாலும் அவருக்கெதிராக யுத்தம் பண்ணச் செல்லுகிறார்கள். "**பரிசுத்தவான்களின் பாளையம்**", "**பிரியமான நகரம்**" என்பது, குறிப்பிட்ட பகுதிகளையோ இடங்களையோ குறிக்காமல், கர்த்தருடைய சபையைப் பற்றி விவரிக்கிறது. சபை, ஆவிக்குரிய் எருசலேம். (எபி.12;22,23). ஆகவே, சாத்தான் விடுதலையானவுடன், எல்லா தேசங்களையும், சபைக்கு எதிரான ஆவிக்குரிய யுத்தத்தில் ஈடுபடுத்துகிறான். இது சபையானது பின்மாற்றமடைவதற்கான ஆரம்பமாக இருக்கலாம். (2.தெச.2;1-4;1.தமோ.4;1). அதிலிருந்து, சபையானது, மீந்திருக்கும் ஒன்றாகவே இருக்கிறது. மீந்திருப்பவர்கள் மீது சாத்தான் தொடர்ந்து தாக்குதல் நடத்திக்கொண்டுள்ளான். (1.பேதுரு.5;8-9). ஆனால், சபையானது ஒருபோதும் அழிக்கப்படாது (தானி.2;44-45, மத்.16;18-19). எபே.3;21, எபி. 12;28).

சாத்தானும், கர்த்தருடைய ஜனங்களுக்கெதிராக யுத்தம் செய்கின்ற அனைவரும் தேவனுடைய ஆக்கினையையும், அவருடைய நித்திய அழிவாகிய தண்டனையையும் அடைவார்கள். (2.தெச.1;3-10). சபைக் கெதிரான யுத்தத்தின் முடிவில் இது நடக்குமென்று, வெளி.20; 9-ல் முன்னுரைக்கப்பட்டுள்ளது. இங்கே, "தேவனால் வானத்திலிருந்து அக்கினி இறங்கி அவர்களைப் பட்சித்துப் போடும்" என்று சொல்லுகிறது. இது, கர்த்தருடைய சபைக்கெதிராக சாத்தானும், உலகமும் மேற்கொள்கின்ற யுத்தமானது, தேவன் தன்னுடைய குமாரனை பூமிக்கு அனுப்பி, தேவனை

அறியாதவர்கள் மீதும், சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்கள் மீதும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும் வரைக்கும் நீடிக்கும் என்பதைக் குறிக்கிறது. (2.தெச.1;7-10). வெளி.20;10-ம் வசனம்., அப்பொழுது சாத்தானுக்கு என்ன நடக்கும் என்று சொல்லுகிறது. "மேலும் அவர்களை மோசம் போக்கின பிசாசானவன். மிருகமும், கள்ளத் தீர்க்கதரிசியுமாயுமிருக்கிற இடமாகிய அக்னியும் கந்தகமுமான கடலிலெ தள்ளப்பட்டான். அவர்கள் இரவும், பகலும் சதா காலங்களிலும் வாதிக்கப்படுவார்கள்" . அநேகர் சாத்தான் நரகத்திற்குச் சென்று, அங்கே துன்மார்க்கருக்கான தண்டனையை மேற்பார்வையிடுகிறவனாக இருப்பான் என்று தவறாக எண்ணிக் கொண்டுள்ளனர். இது உண்மையல்ல, நரகம் பிசாசுக்கும் அவன் தூதர்களுக்கும் ஆயத்தம் செய்யப்பட்டிருக்கும் ஓர் இடம். (மத்.25;41). துன்மார்க்கரும் அங்கே தங்கள் நித்தியத்தைக் கழிப்பார்கள். (வெளி. 14;9-11, 19;19-21; 21;8) பிசாசானவனும், நரகத்தில் நித்திய தண்டனையைப் பெற்று கொள்வானேயொழிய , அதன் மேற்பார்வையாளனாக இருக்கமாட்டான்.

வெளி. 20;8-9 ல் உருவகமாகச் சொல்லப்பட்டுள்ள கோகும், மாகோகும், எசே. 39,40 அதிகாரங்களிலிருந்து அடையாளமாக எடுக்கப்பட்டுள்ளது. எசே. 38:18-ல், இஸ்ரவேலுக்கெதிராக யுத்தம் பண்ண கோகு வந்தான் என்றும், அதன் முடிவு, அவர்களுடைய முழுமையான அழிவு என்று சொல்லுகிறது, இங்கே, வெளி 20-ல், உலகமாகிய, கோகும். மாகோகும் பரிசுத்தவான்களின் பாளையத்தையும், பிரியமான நகரத்தையும், வளைந்து கொண்டார்கள். ஆகவே. எசே. 38;19 உள்ளபடி, இஸ்ரவேலைத் தாக்கியதால், கோகு முற்றிலும் அழிக்கப்பட்டான் என்பது கிறிஸ்துவின் சபையாகிய ஆவிக்குரிய இஸ்ரவேலின் மீது உலகத்தின் தாக்குதலை அடையாளப்படுத்துகிறது. (ரோமர் .2;28,29; கலா.6;16; 1 பேதுரு.2;5-9), தேவன், இங்கே கோகை அழித்தார் என்று நாம் பார்த்தது போல, சபையின் மீதான சாத்தானின் தாக்குதலும் வெற்றிபெறாமல் போகும். வெளிப்படுத்ததல் 20 ம் அதிகாரம் 7 முதல் 10 வசனங்களடங்கிய பகுதி, இந்நூல் முழுவதிலும் சொல்லப்பட்டிருப்பதின் சுருக்கமான தொகுப்பாக உள்ளது. சாத்தான் தந்திரமாகவும், தொடர்ந்தும் கிறிஸ்தவர்களைத் தாக்குகிறான் (அதற்காக துன்மார்க்கரை அவன் பயன்படுத்துகிறான்) ஆனால், முடிவில் தேவன் சாத்தானைத் தோற்கடித்து, அவனையும் , அவன் கூட்டாளிகளையும் நித்திய காலமாகத் தண்டிப்பார். உண்மையுள்ள கிறிஸ்தவர்களோ ஜெயமடைந்து நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்வார்கள்.

**JON MACON** **EZSR**

# உலகில், கிறிஸ்துவுக்கென்று நற்செய்திப் பணி செய்யும் பொறுப்பு சபைக்கு இருக்கிறது.



**பா**வத்தில் ஆத்துமாவை இழந்து காணப்படும் இவ்வுலகில் வந்து, ஒரு பரிபூரண வாழ்க்கையை வாழ்ந்து, எக்காலத்துமுள்ள எல்லா ஜனங்களுக்கும் முன்மாதிரியைக் காண்பிக்கும்படி இயேசு உலகில் வந்தார். (1.பேதுரு.2;21-23). அவர் அப்படியொரு வாழ்க்கையை வாழ்ந்து உலகத்தின் பாவங்களுக்காக ஒரு நிறைவான பலியாகத் தம்மைக் கொடுத்தார். (2.கொரி.5;21). அப்படிப்பட்ட வாழ்க்கையை வாழ்ந்து, முன் மாதிரியைக் காண்பித்து, தன் ஜீவனையும் உலகிற்குக் கொடுத்து, (மரித்து) மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார் (ரோமர்.1;4). அவர் உயிர்த்தெழுந்து சில நாட்களுக்குப் பிறகு பரலோகத்திற்கு ஏறிச் சென்று தேவனுடைய வலது பாரிசத்தில் நமக்காக மத்தியஸ்தராய் அமர்ந்தார் (1.தீமோ.2;5). இந்நேரத்தில்தான், அவரது ஜீவியத்தின் நோக்கத்தை நிறைவேற்றி (அதாவது இழந்துபோனதைத் தேடி இரட்சிக்க வேண்டும் என்ற நோக்கத்தை நிறைவேற்றி) அதற்கான தமது கட்டளையை தமது சீஷர்கள் வாயிலாக நிறைவேற்றினார். அக்கட்டளையை தமது சீஷர்கள் வாயிலாக நிறைவேற்றினார். அக்கட்டளை மத்.28;18-20, மாற்கு. 16; 15-16 லும் எழுதப்பட்டுள்ளது.

நேரம் எடுத்து . இவ்வசனப் பகுதிகளைக் கவனமாக வாசித்து, பிரதானக் கட்டளையாகிய அதன் போதனைகளை கைக்கொள்ளுங்கள்,

**அ.** "சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" (மாற்கு.16;15,16). "போய் போதியுங்கள்" (மத்.28;19). சுவிசேஷம் எனும் பதத்தின் பொருள் "நற்செய்தி" என்பதாகும். அவருடைய பிறப்பு, முன்மாதிரி ஜீவியம், மரணம் உயிர்த்தெழுதல், பாவத்திற்கான நிவர்த்தி மற்றும் பரமேறுதல் ஆகிய அனைத்துமே நமக்கு நற்செய்திகள்தான். இதற்காகத்தான் இயேசு வந்தார். இதனால் தான் நாமும் போய் போதிக்கவும் பிரசங்கிக்கவும் வேண்டியது அவசியமாகும்.

இது ஒரு கட்டளை. அக்கட்டளைக்கு நாம் கீழ்ப்படியவேண்டும் என தேவன் எதிர்பார்க்கிறார் என்பதை நாம் அறிவது மிகவும் முக்கியமானது கீழ்ப்படிதலுக்கு நமக்கு பிரதிபலன் இரட்சிப்பு (எபி.5;8,9). அவரது சித்தத்தை நாம் நிறைவேற்றத் தவறுவோமாகில் நித்திய அழிவே நமக்குக் கிடைக்கும் தண்டனை (மத்.7;21-23).

இந்த வசனப்பகுதிகள் இரண்டு வித்தியாசப்பட்ட வார்த்தைகளை பயன்படுத்தியுள்ளன. அவை முறையே "பிரசங்கியுங்கள்" உபதேசம்

பண்ணுங்கள் என்கிற இரு பதங்களுமே ஒரே மாதிரியான முழு நோக்கத்தை வெளிப்படுத்துகின்றன. எல்லோருமே பிரசங்கிக்க முடியாது. எல்லோரும் பிரசங்கிக்கவும் கூடாது. (1 கொரி.12;12-21) ஆயினும் எல்லாக் கிறிஸ்தவர்களும் சுவிசேஷத்தை உபதேசம் பண்ணும் பொறுப்பைப் பெற்றுள்ளனர்.

ஆ. "சர்வ சிருஷ்டிகளுக்கும்" சகல ஜாதிகளுக்கும் நாம் சகல தேசத்தாரிடத்திலும் செல்லவேண்டும். ஏனெனில் எல்லா தேசத்தாரும் இயேசுவை அறியாது, தங்கள் ஆத்துமாக்களை இழந்தவர்களாகத்தான் காணப்படுகின்றனர், பின்வரும் வசனங்களை வாசித்துக் கற்றுக்கொள்ளவும்.

1. **II.** தெசலோனி.1;7-9, இந்த வசனப் பகுதியில் இரண்டு வகையான ஜனங்கள் "கர்த்தர் வானத்திலிருந்து வெளிப்படும்போது , நித்தியஅழிவாகிய ஆக்கினையை அடைவார்கள்" என்பதை தெளிவாகக் கூறுகிறது. (அ). தேவனை அறியாதவர்கள் (ஆ). சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்கள்" நியாத்தீர்ப்பு நாளிலே தேவனுக்கு முன்பாக நிற்கிறபோது ஒருவர் தேவனைஅறியாதபடியினாலே சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியவில்லை என்று சொல்லி தேவன் தன்னை மன்னித்து விட்டு விடுவார் என எதிர்பார்க்க இயலாது.

2. ரோமர்.1;16-ல் , தேவன் பாவிகளை இரட்சிக்க வைத்துள்ள ஒரே வழி இயேசுவின் சுவிசேஷத்தினால் மட்டுமே என்று கூறப்படுகிறது. வேறுவழியே இல்லை. எனவே வேறொரு திட்டத்தை பிரசங்கிக்க ஒருவரும் தைரியம் கொள்ளாதிருப்பார்களாக ( கலாத்தியா:1;8,9).

3. எபேசியர்.2;1,3,12, ஆகிய வசனங்களில், கிறிஸ்துவுக்குப் புறம்பே இருக்கிற மனுஷனுடைய நிலைமையை விவரிக்கிறார். இந்த வசனங்களில், கிறிஸ்துவுக்குப் புறம்பே இருக்கிறவர்கள், "மரித்தவர்களும்", "கிறிஸ்துவைச் சேராதவர்களும்" "இஸ்ரவேலின் காணியாட்சிகளும் புறம்பானவர்களும்", "வாக்குத்தத்த உடன்படிக்கைகளுக்கு அந்நியரும்", நம்பிக்கையில்லாதவர்களும்" இவ்வுலகத்தில் தேவனற்றவர்களுமாய் இருந்தார்கள் என்று கூறப்படுகிறது.

4. 1.தெசலொனிக்யேர் 4;13-ல், கிறிஸ்துவுக்குள் மரிக்கிறவர்கள் சந்தோஷத்தையும், மகிழ்ச்சியையும், சமாதானத்தையும் பெறுவார்கள். கிறிஸ்துவுக்கு புறம்பே மரிக்கிறவர்களுக்கு நம்பிக்கையில்லை, என்று கூறப்படுகிறது.

5. யோவான். 14;6-ல், தேவனிடத்தில் செல்ல இயேசுவை வழி என்ற கூறப்படுகிறது. வேறு எந்த தீர்க்கதரிசியின் மூலமோ இரட்சகர் மூலமோ செல்ல முடியாது. வேறொருவராலும் நம்மை தேவனிடத்தில் சேர்க்க முடியாது.

6. அப்போஸ்தலர் 17;30-31 ல் மனுஷர்களின் அறியாமையை இனியும் தேவன் தாணதவர்போல் இருப்பதில்லை. அது ஒருவேளை, நாமகரணக்

கூட்டத்தாரானாலும் சரி அல்லது விக்கிரக ஆராதனையாக இருந்தாலும் சரி. உலகம் முழுவதும் ஒரே மாதிரியான அளவுகோலின்படியே நியாந்தீர்க்கப்படும்.

இயேசுவில்லாத முழு உலகமும் தங்கள் ஆத்துமாவை இழந்தவர்கள்தான். இதற்காகவே நாம் உலகில் வந்தோம். இதற்காகவே நாம் உலகத்தை விட்டுப் போகப் போகிறோம். சிலர், "மக்களை நான் மிக அதிகமாக நேசிக்கிறேன், ஆதலால் அவர்களை என்னால் கண்டிக்க இயலவில்லை, வருந்துகிறேன்" என்கின்றனர். அப்படிப்பட்டவர்களுக்கு நமது பதில் இயேசு அன்பு என்ற வார்த்தைக்கு அளிக்கும் விளக்கம் அதுவல்ல. யோவான் 14;15-ல் அன்பாயிருந்தால் கீழ்ப்படியவேண்டும் என்று இயேசு சொன்னார். நாம் திருமறையைக் கண்ணுற்று கிறிஸ்துவுக்கு புறம்பேயிருப்பவர்கள் இழந்து போய்கொண்டுள்ளனர் எனப் போதிப்பதை அறிந்தும். அவர்களை எச்சரிக்காமல் போவது, தன்னிடம் மருத்துவம் பார்க்கும் வியாதியஸ்தர், தனது வியாதியால் சாவான் என்பதை அறிந்திருந்தும், முடிவை அவனிடம் சொல்லி அவனை வருத்தப்படுத்தக்கூடாது என்று மறுக்கும் டாக்டருக்கு ஒப்பானதாகும். "நட்பு இணக்க" சுவிசேஷம் மக்களின் அன்றாட நடைமுறை கலாச்சாரத்தோடு ஒத்துப்போகும் வகையில் போதிக்கப்படும்போது, அது அநேகருடைய ஆத்தும இரட்சிப்பை இழக்கச் செய்யும்.

இதன் எளிமையான சத்தியம் என்னவெனில். "கிறிஸ்துவுக்குப் புறம்பே எந்த மனிதனும் இரட்சிக்கப்பட இயலாது" என்பதுதான்., கிறிஸ்தவர்களல்லாதோருக்கு (பரலோக) நம்பிக்கையை வாக்களிப்போர் (அது விக்கிரக ஆராதனை எனும் இருளில் இருப்பவர்களிடத்திலோ அல்லது பிரிவினைக் கூட்டத் தவறுகளில் இருப்பவர்களிடத்திலோ அவர்களுக்கு ஏற்ப ஒத்துப்போகுதல்) திருமறை சொல்லாதவைகளைச் செய்வதும், எல்லாரிடத்திலும் சுவிசேஷம் செல்ல வேண்டும் என்று பிரயாசப்படும் உத்தம சீடர்களின் கைகளை பலவீனப்படுத்துவதுமாகும்.

**இ.** நான் உங்களுக்கு கட்டடையிட்ட யாவையும் அவர்கள் கைகொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள், இதே உண்மையை பவுலும் 2. தீமோத்தேயு 2;2-ல் போதிக்கிறார். அநேக சாட்சிகளுக்கு முன்பாக நீ என்னிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்கு போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவி. இந்த வசனம்தான் பிரதானக் கற்பனையில் 2-ம் பாகம் என்றும், இரட்சிக்கப்பட்டவர்களை இரட்சிக்கப்பட்டவர்களாகவே காத்துக் கொள்ளுதல் என்றும் கூறப்படும். இவ்வசனப்பகுதி நான்கு நிலை உபதேசத்தையும் புரிந்துகொள்ளுதலையும் காட்டுகிறது: அதாவது இவ்வசனப் பகுதி, ஆரம்ப நிலைக்கும் முடிவு நிலைக்கு இடைபட்ட வித்தியாசத்தை ஊழிய விஷயத்தில் காட்டுகிறது.

1. அநேக சாட்சிகளுக்கு முன்பாக நீ என்னிடத்தில் கேட்டவைகளை; மற்றவர்களிடத்தில் நாம் கற்றுக் கொள்வதிலிருந்து நம் வாழ்க்கையில் கை கொள்ளத்தக்க வகையில் கற்றுக்கொள்ள வேண்டுமென தேவன் நம்மிடம் எதிர்பார்க்கிறார். நாம் கற்றுக்கொள்ளும்போது நம்மை நாமே ஆய்வு செய்கிறோம். (அப்.17;11).

2. **மற்றவர்களுக்குப் போதிக்கத்தக்கதாக,** இங்குதான் நமது ஊழியம் பரீட்சிக்கப்படுகிறது. நாம் போதிக்கும் நபர், தான் பெறும் செய்தியை மற்றவர்களுக்கு போதிக்கத்தக்கதாக நமது செய்தி அவர்களுக்குள் ஒரு ஏவுதலை (மனத்தூண்டுதலை) உண்டு பண்ணவேண்டும்.

**கருத்து:** புதிதாக மாறிய கிறிஸ்தவர்கள் விழுந்துபோக விரும்புவதில்லை. அவர்கள் வளருவதற்கு நாம் உதவ வேண்டும். அவர்களுக்கு முழு சத்தியத்தையும் போதிக்கவேண்டும் (அப்.20;26-27). நாம் அன்பினாலே சத்தியத்தைப் போதிக்க வேண்டும் (எபேசியார்.4;15). சரியான நேரத்தில் நாம் சத்தியத்தை போதிக்க வேண்டும். (1.கொரி.3;1-2, 1.பேதுரு.2;2) நாம் மற்றவர்களுக்கு போதிக்க வேண்டும். (2.தீமோ.2;2).

3. உண்மையுள்ள நபர்களிடத்தில் ஒப்புவித்தல் தீமோத்தேயுவினிடத்தில் போதிக்கப்பட்டவை தீமோத்தேயுவிடன் நின்று விடாதபடிக்கு போதிக்கப்பட்டது. மற்றவர்களுடன் அவை (போதிக்கப்பட்டவை) பகிர்ந்து கொள்ளப்பட வேண்டியவை. நாம் "விசுவாசத்தைக் காத்துக்கொள்வதற்கு மேலாக செய்ய வேண்டியதுள்ளது என்று பவுல் கூறுகிறார். எனவே நாம் மற்றவர்களுடன் நாம் பகிர்ந்து கொள்ளாத போது சத்தியம் நம்மோடு நிறுத்தப்பட்டு நமது ஊழியப்பயணம் முடிவுபெறும்.

**ஈ.** இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் உங்களுடனே கூட இருக்கிறேன். நம்மோடு கூட நாம் போகுமிடமெல்லாம் தாமும் செல்வதாக இயேசு சொல்லுகிறார். உயரம், அகலம் போன்ற எவ்வித எல்கையும் சுவிசேஷம் பரவுவதை தடுக்கும் பலனுடையவைகள் அல்ல.(பிலி.4;13). அவர் நம்மைவிட்டு விலகுவதுமில்லை, நம்மைக் கைவிடுவதில்லை(எபி.13;5).

தேவன் தாமே நாம் “புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி:பிதா, குமாரன், பரிசுத்தாவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, இயேசு கட்டடையிட்டயாவையும் கைக்கொள்ளும்படி உபதேசிக்க வேண்டும். இதுவே சபையின் ஊழியம். தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் செய்கிற மற்ற அனைத்துக் காரியங்களும் ஊழியத்திற்கு அடுத்தவைகள் மட்டுமே.

- JERRY DYER



# HEAR THE VOICE OF TRUTH

## ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 8.45 - 9.00 p.m.<br>9.00 - 9.15 p.m. | Box.3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Sun, Mon<br>Tue, Thu | 2.00 - 2.15 p.m. | Box. 80<br>Kakinada - 533 001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box. 8405<br>Bangalore - 560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum - 695 034 | P.K. Varghese |



***Please write to these address for Bible Correspondence Courses, Magazines and other Christian Literatures***

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST

Postal Regn. No. TN / WR / ERD / 77 / 2002
Licensed to Post without Prepayment
TN / WR / ERD / 03 / WPP / 2002

Registered News Paper
RNI No. 47661 / 87 - New Delhi

# அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக்
கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு

## ஓர் இனிய செய்தி

ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட,
அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில் நீங்கள்
விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம்.
இது 15 பாடங்களைக் கொண்ட

**ஓர் இலவசப் பயிற்சி,**

இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு
சான்றிதழ் வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

இயக்குநர்
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி,**
த.பெ.எண்–27, காங்கேயம் – 638 701.
தமிழ்நாடு. இந்தியா

Published by **Church of Christ, Kangayam,**
Printed at Konar Printers, Madurai - 625 012. Editor : **S. Rajanayagam.**